SIR SIVASWAMI AYYAR HIGH SCHOOL MAGAZINE

TIRUKATTUPALLI. 1953-54

MEMBERS OF THE TRUST BOARD.

Sir P. S. Sivaswamy Ayyar,

Founder (1906) & First Chairman (1926 - '46)

Sri T. R. Venkatarama Sastriar, C. I. E.,

Member (1926 - '46) & Chairman. (1946 - '53)

PRESENT MEMBER & CHAIRMAN

The Hon'ble Mr. Justice P. N Ramaswami Ayyar, I.C.S.,

Judge of the Madras High Court. - & Chairman.

OTHER MEMBERS

Sir S. Varadachariar, Kt.,

Retd. Judge of the Federal Court, New Delhi.

Sri K. A. Nilakanta Sastri, M. A.,

Retired Professor of History & Archaeology, Madras University, & Professor of Indology, Mysore University.

Sri K. S. Sankara Ayyar, B. A., B. L.,

Advocate, Mylapore.

Sri S. R. Balasubrahmanyan, M. A., L. T.,

Secretary.

திருக்காட்டுப்பள்ளி

ஸர் சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல்

சஞ்சிகை

1953 – 54

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

முதல் வெளியீடு

ஆசிரியர்:

S. R. பாலசுப்பிரமணியன் M.A., L.T.

தலைமை ஆசிரியர்,

ஸர் சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப்பள்ளி,

திருக்காட்டுப்பள்ளி.

அச்சிட்டது:
காவேரி கலர் பிரஸ்,
கும்பகோணம்.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

CONTENTS

Foreward

by the Hon'ble Mr. Justice P. N. Ramaswami I. C. S.

Our Motto, வாழ்த்துப்பா மு. வ.

காந்தியார் வாழ்க S. P. திண்ணப்பன்

மறக்கவும் முடியுமோ ? .. ..

செந்தலை - வரலாறும் கல்வெட்டுக்களும் S. R. B.

செந்தலைப் பாக்கள் — T. V. G. 12

[Photos – S. Hariharan]

Our Excursion to Mahabalipuram and Gingee 35

N. Jayaraman, VI B.

எமது இன்பப் பிரயாணம், E. R. Srinivasan, VI A. 38

மாமல்லபுரமும் கங்காவதரணமும், S. R. B. & R. K. 45

The Autobiography of an one Anna Coin. 50

R. Narayanasamy, VI B.

A Possible Solution to our Food Problem. 52

G. Anandavalli, VI C.

மெய்யுரை — S. D. 54

ஐ. நா. ஸ்தாபனம் கோ. ராமன். 59

திருக்காட்டுப்பள்ளிப் பருவநிலைக்குறிப்பு K. S. 63

சிவஸ்வாமிபுரம் விவசாயப் பண்ணை 69

V. கிருபாசங்கரன்

- Do - நாட்டுமெட்டுப் பாட்டுக்கள் மு. வ. 71

The Andhra State. K. S. 73

The Indian Union. — Some Statistics. — 79

Mathematical Magical Tables. A. S. 80

Social Studies in the Secondary School. S. R. B. 85

சிறந்திடச் செய்திடாயே T. V. G. 94

Titukattupalli Election of the Panchayat Board. 95

IV Form Pupils.

Report on Physical Education. R. G. N. 97

Work of the Staff Council 100

Scout Activities and Excursions. C. R. 102

The Five year Plan. 103

The School Parliament. 108

The Kalyani Home Cabinet. 109

Celebration of the Founder's Death Anniversary 113

(5-11-52)

The Founder's Day Celebration Report and

School Chronicle.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

FOREWORD

BY

The Honourable Sri Justice P. N. Ramaswami I. C. S.,
Chairman, Board of Trustees.

Sri S. R. Balasubrahmanya Ayyar has requested me to write a brief foreword to this newest venture of our institution. I do so gladly, remembering my own connection during my College days with the **St. Joseph's College Magazine.**

A school magazine serves a three-fold purpose. It is a connecting link between the old boys and former members of the Staff and the present pupils and existing members of the Staff. Through its pages each gets news of the other. Secondly, it will give scope to our talented pupils to show their mettle. This will stand them in good stead in later days, as my own journalistic activities during my College days did in my case. My articles on the History of Indian Famines in the pre-British times in the St. Joseph's College Magazine attracted the attention of Sir Richard Carnac-Temple who reprinted them in the **Indian Antiquary** and which gave its author in those days a very welcome boost. Thirdly the School Magazine will nourish and sustain public interest in the institution. In democracies, institutions have the success their publicity activities deserve.

I wish this venture all the success it richly deserves and end this foreword with the hope that the contents will continue to be interesting, suited to the requirement of old and present boys and satisfy all tastes by variegated reading matter.

JAI HIND!

P. N. Ramaswami.

OUR MOTTO

यतो धर्मः ततो जयः ।

Where there is Dharma there is victory.

அறமே வெற்றி

வாழ்த்து முதற்பா

மாணவர்கள் நாட்டும் மணிவா சகநடையைக்
காணவரும் ஆர்வம் கணக்கிலதால்-மாணவைதாம்
அச்சூர்தி மேலேறி யம்புவியு லாப்போந்தே
உச்சநிலை கொள்க உயர்ந்து.

மு. வடிவேற்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

காந்தியார் வாழ்க

அடிமைத் தளையை அறவே யகற்றிய
மடியிலாப் பெரியோய்! மன்னியே வாழ்க!
தீண்டா மையெனும் தீய வழக்கை
மாண்டிடச் செய்த மாண்பினோய் வாழ்க!
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்றே எடுத்து இயம்பியோய் வாழ்க!
அமிழ்தினு மினிய அழகுகள் நிறைந்த
தமிழ்மறை பிடித்த தனியோய் வாழ்க!
சொல்லும் செயலும் தேவை யென்னும்
எல்லினைக் கொண்ட ஏந்தால் வாழ்க!
மறப்போர் மிகுந்த மதியிலா வுலகில்
அறப்போ ராக்கிய அண்ணல் வாழ்க
இந்திய ரிடுக்கணை ஆப்பிரிக் காவில்
தந்திரம் கொண்டு தவிர்த்தோய் வாழ்க!
படிமிசைப் போற்றும் பழைமை உலகின்
குடிசைத் தொழிலைக் கொணர்ந்தோய் வாழ்க!
வேதம் போற்றும் கடவுள் கண்ணன்
பாதம் வணங்கும் பக்தியோய் வாழ்க!
அன்பும் எளிமையு மகலாக்
கண்ணியப் பெரியோன் காந்தி வாழியவே!

சு. ப. திண்ணப்பன்,
ஆறும்படிவம் 'இ' பிரிவு

மறக்கவும் முடியுமோ?

கன்னலும் கதலியும் களங்க மில்லாச்
செந்நெலும் செழித்துத் துன்னிட உதவும்
பொன்னியின் தென்பாற் பொற்புட னிலங்கிக்
கன்னியாம் பூமகள் கனிவுடன் விளங்கும்
காட்டுப் பள்ளியில் பல்கலைப் பள்ளி
நாட்டி நற்பயன் நன்கனம் பெற்றோன்
தேசத் தொண்டும் மாசில் கலையின்
பாசமும் பெற்ற பண்புடை அண்ணல்
பிறர்நலம் பேணிப் பிழையுறு தன்னலம்
மறந்து வாழ்ந்த மதிப்புடைப் பெரியோன்
நானிலம் செய்த நற்றவத் தால்நம்
மாநிலம் பெற்ற சிவசாமிப் பெரியோன்
அறிவெனு மணங்கிற் கழகுடை இல்லம்
செறியும் வண்ணம் செய்து தந்த
பேற்றால் விண்ணாள் பெரியோற்
போற்றவும் இயலுமோ? மறக்கவும் முடியுமோ?

சு. ப. திண்ணப்பன்.
ஆறாம்படிவம் 'இ' பிரிவு



His Excellency **Sri. PRAKASA** (Governor of Madras) AT OUR SCHOOL ON 26-10-'53

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS 10 DEC 1955

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Sri T. R. Venkatarama Sastriar, C. I. E.
Ex-Chairman, Board of Trustees.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



The Hon'ble Mr. Justice P. N. RAMASWAMI AYYAR, I. C. S.
High Court Judge, Madras & Chairman, Board of Trustees.



CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Sir S. VARADACHARIAR, Kt., Retd. Justice,
Federal Court, New Delhi and Member Board of Trustees.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955

Professor K. A. NILAKANTA SASTRIAR
Member, Board of Trustees.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Sri K. S. Sankara Ayyar, B. A., B. L.,
Advocate & Member Board of Trustees.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Sri S. R. Balasubrahmanyan,
Secretary, Board of Trustees.

SENDALAI

CONNEMARA PUBLIC LIBRARY



East Main Gopuram



Southern face – Image of Brahma separately installed



Southern face-carved pillar Bhutagana frieze and the inscribed wall containing 9th and 10th century inscriptions of Rajakesarivarman alias Aditya I and Parantaka I. Chola kings.



Garbhagraha and Vimana of the Central Shrine-morden Sundareswara Shrine (old temple of Tirupperundurai Mahadeva)-Northern face.

CONNEMARA PUB.
1 DEC 1955

SENDALAI

Sendalai is a small village about 2 miles east of Tirukattupalli, on the road to Kandiyur and it is situated on the southern bank of the Kudamurutti, a branch of the Kaveri.

It has an old temple, now known as the Sundareswara temple but according to the inscriptions on its walls, it was known in the past as the temple of Lord **Mahadeva of Perundurai** situated in Chandralekhai Chaturvedimangalam (the ancient name of Sendalai) included in **Arcottukkurram** and this again formed part of **Pandya Kulasani Valanadu** during the days of Chola hegemony. This is said to be a **Brahmadheya** village.

There are about 40 inscriptions on the walls of this temple covering the period of nearly 500 years from the latter part of the 8th Century A. D. (Circa. 781 A. D.) to the 13th century (1265 A. D.).

The earliest name of the deity of this temple is Lord Mahadeva of **Tirupperundurai**, and it is mentioned in an inscription of the 16th year of a Pandyan king Maranjadaiyan, and this inscription is found on a stone on the left of the entrance to the Vigneswara shrine in the western prakara of this temple-not on the vimana of the main shrine. And the earliest inscription on the walls of the central shrine is that of the 2nd year of the early Chola king Rajakesarivarman, who may be identified with Aditya I

(871-907 A. D.) and the Anbil copper plates of the Cholas mention, to the credit of Aditya I, the building in honour of Siva tall stone temples on both banks of the Kaveri from the Sahyadri mountains (the western ghats) to the ocean. From this we have to infer that the temple of Sendalai too should have been in the early period a brick structure and it was built of stone in the latter part of the 9th century A. D. by Aditya I or his subjects.

Another interesting point to consider here is the name of Tirupperundurai. We know that this is the name of the place where the famous Saiva Saint Manikka-vasagar attained his enlightenment and spiritual beatitude.

Whether this place was in any way connected with the life of this saint, we don't know. Anyhow, it seems reasonable to assume that it was named after the illustrious place hallowed by the memory of the great saint.

The next point to discuss is the identification of Maranjadaiyan, the Pandya king in whose 16th year one Nili Narani made a gift of 8 kalanjus of gold from whose interest a day lamp (பகல் விளக்கு), was to be burnt in the shrine of Lord Mahadeva of Tirupperun-durai. The managers of the temple (koil udaiyar) agreed to burn the lamp, and the gift was placed under the protection of the Perumakkal of the place and the Maheswaras.

Here is the text of the inscriptions:—

"ஸ்வஸ்திஸ்ரீ கோமாறஞ் சடையற்கு யாண்டு 16வது திருப்பெருந்துறை மஹா தேவர்க்கு கரிக்குடி

சாங்தோ கரணி நாராயணன் மாறன் பிராம்மணி நீலி நாரணி பகல் விளக்கு எரிப்பதாக வைத்த பொன் எண் கழஞ்சு. இப்பொன் கொண்டோம். இதன் பலிசை யால் பகல் விளக்கு எரிப்போமாறேம். திருப்பெருந் துறை திருக்கோயிலுடையோம். இவ்வூர் பெருமக் களும் மாஹேஸ்வரரும் இரக்ஷை''

There are many inscriptions with the name of *Maranjadaiyan* and *more* than one Pandya king has assumed the name of Maranjadaiyan and so the identification becomes difficult, and I am inclined to identify him with the famous Pandya ruler **Jatilavarman Parantaka Nedunjadaiyan** *alias* **Varaguna Maharaja** whose accession is fixed at about 765 A. D. for the following reasons:- Varaguna made extensive conquests as far north as the Pennai river in the Tondainadu. There is a record of the 8th year of Maranjadaiyan at Kumbakonam then called Kudamukku.

At Niyamam 4 miles away from this place, a Servant of Videl Vidugu Mutharaiyan made a gift of land for a lamp and food offerings to Makala Pidari of Niyamam in the **10th year of Maranjadaiyan.** Further the Trichinopoly inscription of this king clinches the issue. In the 4th year 2501th day, that is about his 10th year, **Maranjadaiyan alias Pandiyadhiraja Varaguna deva** gave a gift of 125 kalanjus of gold to Tirumal Bhatarar (at Trichirapalli) while he was staying at Niyamam after destroying the walls of the fort of **Vembil** (Perhaps identifical with modern Veppathur).

Here is the text:—

''கோமாறஞ் சடையற்கு யாண்டு நான்குநாள் இராயிரத்தைன்ஞூற்றென்று வேம்பில் மதில் அழிந்

துப் போந்து நியமித்திருந்தருளி...பாண்டியாதிராஜன் வரகுண தேவர் திருமால் படாரருக்குக் கொடுத்த பொன் பாடிக் காலால் 125 கழஞ்சு (Symbol)."

Based on this circumstantial evidence, I think that we may draw the inference that the **Maranjadaiyan** of this place is identical with **Varaguna Pandya** who ascended the throne about 765 A. D. If this inference is correct, then the inscription of Maranjayan which mentions the deity of Mahadeva of Tirupperundurai should have existed earlier than 781 A. D., that is more than 1170 years ago. How long earlier, we are not in a position to guess, as so many things of the past shrouded in mystery.

About this period, it has to be remembered that the Chola power had become completely eclipsed and the Pallavas (Dantivarman 775-826 A. D.) and Nandivarman III of Tellaru fame (826–849 A. D.) in the north and the Pandyas in the south (Varaguna 765-815 A. D.) were the two powerful royal dynasties that ruled over this part of the Tamil land. And it was on the decline of the Pandyas and the Pallavas about the middle of the 9th Century A. D.. that the Cholas of Tanjore under Parakesari Vijayalaya (850-871 A. D.) and Aditya Rajakesarivarman, (871-907 A. D.) rose to power, and started a new era of expansion and glory for South India.

Nearly a century rolled on when we came to the reign of the Chola ruler Rajakesari Varman alias Aditya I (871-907 A D) I have already stated that the present temple might have been built of stone

SENDALAI

CONNEMARA PUBLIC LIBRARY 14 DEC 1955



Nataraja and Sivakami Amman-front view.



Chandrasekhara-Siva and Parvathi-front view.



Nataraja and Sivakami Amman -back view.



Chandrasekhara-Siva and Parvathi-back view.

in his reign. In an inscription of his second year (873 A. D.) three persons make a gift of 15 kalanjus of gold from whose interest the managers of the temple agreed to give an Olaku of ghee for the burning of a perpetual lamp to Mahadeva, of Tirupperundurai situated in the Brahmadeya (village of) Chandralekhai Chaturvedimangalam which formed a part of **Arcottuk-kuram.** (Arcot is a small village 3 miles to the south west of Tirukattupalli)

> "ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரிவர்மருக்கு யாண்டு 2ஆவது ஆற்காட்டுக் கூற்றத்து பிர்ம்ம தேயம் சந்திர லேகை சதுர்வேதி மங்கலத்து திருப் பெருந்துறை மஹாதேவர்க்கு."

It is here for the first time that we learn that it was a brahmadeya village, a village given as a gift to brahmans and it was called **Chandralekhai Chaturvedimangalam** whose corruption is **Senda-lai**, its modern name.

Another important inscription of the 9th year of this ruler (880 A D.) deserves special mention and therefore to be quoted in extenso:—

> "ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரிவர்மற்குயாண்டு 6-ஆவது ஆர்க்காட்டுக் கூற்றத்து பிர்ம்மதேயம் சந்திர லேகை சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி சபையோம் இவ்வூர் *ஐம்பத்து மூன்றும் குடுப்பில் பாரதப் பங்குக்* கோயிலாந் நாகநந்தி விற்றபங்கு [1] இவ்வொரு பங் கும் இவ்வூர் பிர்ம்மஸ்தானத்து மீய்செங்கிளி நாட்டு வெண்ணையிலுடையான் வயிரமேக படாரன் எடுப் பித்தஅம்பலத்து இருந்து *நிசதியும் ஸ்ரீபாரதம் வாசிக்க* பெரும்புலியூர் ஆத்ரேய கோத்திரத்து வைகானஸ ஸூத்திரத்து சிங்கிநந்தீசுவர பட்டனுக்கு

இறையிலியாகக் குடுத்தோம் ஸபையோம். இந்நிலம் பின்பு இப்பங்குண்பார் இவ்வூர் பிர்ம்மஸ்தானத்தே இருந்து நிசதியும் ஸ்ரீ பாரதம் வாசித்துண்பதாக. இப்பங்கொன்றும் சந்திராதித்தவத் இறையிலியாகப் பணித்து கல்மேல்வெட்டிக் குடுத்தோம். பெருங்குறி ஸபையோம்.''

This document is very important and interesting from many points of view:- The great Assembly (Perumguri Sabhai) of this place bought a piece of land (One **pangu**) and donated it to a person for the expounding everyday of the Mahabharata in the hall of the temple built by one **Vennaiyil Udayar Vaira Megha Bhataran** and the land was made **tax free** and it was further stipulated that it was to be enjoyed by the present donee and in future so long as the sun and moon endure by one who did this service in the hall of the temple.

And we learn further that this **Pangu** of land was in the 53 **Kudumbu** of the place. The word **Kudumbu** means to use a modern expression 'ward.' It is interesting to recall that in 921 A. D. the sabha of Uttirameru Chaturvedimangalam made detailed arrangements for the election by pot tickets (Kudavolai) of the members of the various committees of the general assembly and prescribed their qualifications and disqualifications. Uttiramerur had only 30 wards whereas Chandralekhai Chaturvedimangalam had more than 53 wards, i. e. nearly twice the size of Uttiramerur. The functioning of these local self-governing bodies earlier than Uttieramerur by 42 years is of great significance in the history of local self-government in

Southern India. There are other inscriptions of this ruler in this temple which mainly refer to gift of lands and food offerings to the deity.

Three inscriptions of Parakesarivarman who can be identified with the Parantaka I (acc. 907 A. D.) the son and successor of Aditya I are found here. One of them makes an endowment of 150 Illakasu for the construction of a tank called (**Virasikhamanip pereri** and providing stone steps therefor.

On the South wall of the main shrine there is an inscription of the 4th year of Parakesarivarman "who took the head of the Pandya" that is Aditya II (955-969 A. D.) and it makes an endowment of land for burning three **Sandi** lamps and for special food offerings to Ganapati.

On the west wall there is an incomplete record of Rajendra Chola the conqueror of Gangai and Kadaram (acc. 1012 A. D)

An inscription of the 44th year of Kulottunga I (that is 1114 A. D.) provides for the gift of oil and food offerings on Saturdays to Lord Mahadeva of Tirupperundurai in Chandrelekhai Chaturvedimangalam.

Nearly after the lapse of a century and a half subsequent to the previous record we have on the second Gopura of the temple an inscription of the 10th year of the Hoysala king Viva Ramanatha (that is 1265 A. D.) but the inscription is too mutilated to make any sense.

Thus we get only a few glimpses of the past glory of this place.

Some of the sculptures of stone found in this temple have been removed from this temple to the Art gallery housed in the palace at Tanjore and these belong to the 9th century A. D. the period of Adiya I (acc. 871 A. D.) in whose reign the present central shrine of the temple should have been built.

Further Note on Sendalai.

Sendalai has also an additional importance. There are four granite stone pillars used for the construction of the mandapa in front of the temple. These pillars originally belonged to the temple of **Makalattup-Pidariyar** of **Niyamam** (modern Nemam) about 4 miles to the west of Sendalai. Niyamam was the capital of local tribal chiefs called the **Muttaraiyars**, who had played a distinuguished part in the 8th & 9th centuries in S. India.

On these pillars we have an inscription of the 10th year of **Pandya Maranjadaiyan**: an inscription of Pallava **Nandivarman III** (826–849 A. D.) in addition to the original inscription of **Perumpidugu Mutharaiyan** alias **Svaran Maran** the general of the Pallava King **Nandivarman Pallava-malla II** (710–775 A. D.) The last chieftain constructed a temple to **Makalattup Pidariyar** at **Niyamam**. The places he destroyed, his birudas, the names of the poets who sang his praise, and the Tamil songs they composed in honour of this



Inscription of the 24th year of Rajakesarivarman alias Aditya I.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

SENDALAI



. Local Legends sculptured in the Eastern Gopuram I-st tier.

chief are inscribed on those four pillars. The inscription mentions three generations of Muthariyars and they are:

Perumpidugu Mutharaiyan *alias*
Kuvavan Maran
|
Ilangovadi Muthariyan *alias*
Maran Parameswaran
|
Perumpidugu Mutharaiyan *alias*
Svaran Maran

The following are some of the birudas of Perumpidugu Muthariyan alias **Svaran Maran**:—

Sri Maran
Sri Satrukesari
Sri Kalvarkalvan
Sri Adisahasan
Sri Abhimanadhiran.

The following are the names of the Tamil Poets:—

Vel Namban of Pachil
Ilamperumanar of Kottaru
Kuvavan Kanjan
Achariyar Aniruddhar.

பெரும்பிடுகு முத்தரையனுன சுவரன் மாறனின் தலைவனும், பல்லவப் பேரரசனும் ஆன ***இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனின்*** வரலாறு பின் வருமாறு:- அவன் ஆண்ட காலம் (கி. பி. 710—775.):

பல்லவர்கள், காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தனர். அவர்களுடைய துறைமுகப்பட்டினம் ***மாமல்லபுரம்***. சுமார் கி. பி. 600-லிருந்து கி. பி. 710-வரையில் சிம்மவிஷ்ணு வம்சத்தைச்சேர்ந்த பல்லவ மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்டுவந்தார்கள். அவர்களில் சிறந்தவர்கள், மகேந்திரவர்மனும் அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மனும் ஆவர். இந்த வம்சத்துக் கடைசிப் பல்லவ அரசன் இரண்டாம் பரமேசுவரன். இவன் திடீரென்று இறக்கவே பல்லவ வம்சமானது வாரிசுகளின்றித் தத்தளித்தது.

இப்படி இருக்கக் காஞ்சிமாநகரக் குடிமக்களும், மந்திரிகளும், அரச பட்டத்திற்கு உரிமையுடைய ஒருவனைத் தேர்ந்தெடுக்க முயன்றார்கள். பரமேசுவரவர்மனுடைய குல முதலாகிய சிம்மவர்மனின் தம்பி வம்சத்தில் தோன்றிய ஹிரண்யவர்மனை அணுகி, அவனுடைய சந்ததிகளில் ஒருவரை அரசனாக்க உதவவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

இராஜ்ஜியத்தைக் கொடு, கொடு என்பார் நிற்க அவனுடைய சந்ததியார்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் வேண்டாம் என்று தப்பினார்கள். ஹிரண்யவர்மனது நான்காவது மகனான பரமேசுவரன் என்ற பல்லவ மல்லன் மாத்திரம் 'தான்போவேன்' என்று துணிந்து நின்றான். ஹிரண்யவர்மன் மனங்கலங்கினான். ஆனால் தன் மந்திரியினுடைய ஆறுதலின் பேரில் காஞ்சிக்கு அனுப்ப மனம் துணிந்தான். பன்னிரண்டு பிராயமுடைய பல்லவ மல்லனுக்குக் காஞ்சியில் சாமந்தர்கள் மகுடாபிஷேகம் செய்வித்து நந்திவர்மன் என்னும் அபிஷேகநாமம் வழங்கினர். இவன் அறுபத்தைந்து ஆண்டுகள் சிறப்புடன் அரசு நடத்தினான். இவனுடைய காலத்தில் இவனால் வழங்கப் பெற்ற நான்கு செப்பேடுகள் இப்பொழுது கிடைத்துள்ளன. (1) உதயேந்திரம், (2) காசாக்குடி, (3) தண்டந்தோட்டம், (4) பட்டத்தாள்மங்கலம்.

இவன் ஒப்பற்ற வீரன். ஆகையால் இவனுக்கு *ஏகதீரன்* என்ற பட்டப்பெயருண்டு. பல்லவரது பட்டத்திற்குப் போலி உரிமை கொண்டாடிய சித்திரமாயன் இவனுக்குப் பல இன்னல்கள் புரிந்தான். பாண்டிய மன்னனை நெடுஞ்சடையன் சாளுக்கிய வம்சத்து இரண்டாம் விக்கிரமாதித்தன் முதலியவர்கள் நந்திவர்மனை எதிர்த்துப் பல போர்கள் புரிந்தார்கள். இப்போர்களில் பேருதவி புரிந்த வீரர்கள் பல்லவச் சிற்றரசர்களான வில்வலத்தில் வாழ்ந்த உதயசந்திரனும் நியமத்தில் வாழ்ந்த பெரும்பிடுகு முத்தரையனை சுவரன்மாறனும் ஆவர்.

நந்திவர்மன் காஞ்சியில் வைகுண்டபெருமாள்கோயில் என்று ஒரு கோயில் கட்டுவித்தான். இக்கோயில் அக்காலத்தில் பரமேசுவரவிண்ணகரம் என்று வழங்கப் பெற்றது. இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வாரது மங்கள சாஸனமும் இக்கோயில் பெற்றுள்ளது.

[S. R. B.]

செந்தலை

சுந்தரேசர் கோயில் மண்டபத் தூண்களில் தற்காலம் காணப்படும் நியமத்துக் கல் வெட்டுப் பாடல்கள்

இப்பாட்டுக்கள் வெண்பாவாகவும் கட்டளைக் கலித்துறையாகவும் காணப்படுகின்றன. இவற்றுட் சில சிதைந்துபட்ட நிலையில் உள்ளன. இப்பாடல்கள் அரசர்களுடைய சிறப்பைக் கூறுவதோடு இலக்கியவளம் சான்றனவாய் உள்ளன. இவற்றிற்கு ஓராற்றான் உரைவரைந்து ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

முதல் தூண் – வடபுறம் – மேற்பகுதி

முத்த பெரும்பிடுகு முத்தரையனாயின குவாவன் மாறனவன் மகன் இளங்கோவடி யரையனாயின மாறன் பரமேசுவரனவன் மகன் பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறனவன் எடுப்பித்த பிடாரி கோயில் — வன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும் இத்தூண்கள் மேல் எழுதின இவை.

மேற்புறம்:

1. ஸ்ரீ மாறன். 2. ஸ்ரீ சத்ருகேஸரி. 3. ஸ்ரீ கள்வர்கள்வன். 4. ஸ்ரீ அதிஸாஹஸன்.

கீழ்ப்புறம் பாச்சில் வேள் நம்பன் பாடின:

1. வெங்கட் பொருமாசேர் வெல்கொடியான் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க — அங்குவந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்று மூர்.

கொடிய கண்களையுடைய, போர்செய்கின்ற **விலங்கு** *பொருந்திய, போரில் வெற்றி கொள்ளும் கொடியை உடைய, வாள் ஏந்திய பெரும்பிடுகு முத்தரையனை சுவரன் மாறனுடைய, சிவந்த கண்களையுடைய கரிய யானைகள் போர்க் களத்தில் சென்று பகைவர்களைக் கலக்கியதால், அங்கு இறந்து*

SENDALAI

CONNEMARA PUBLIC LIBRA



Somaskanda decorated for a festival



Somaskanda-Siva, Skanda and Parvati-front view



Somaskanda-Siva, Skanda and Parvati-back view

போன வீரர்களுடைய தேர்கள் பூமியில் அழுந்தவும், குதிரைகளும் பூமியில் பதியவும், அவ்வுடல்களிலிருந்து வெளிப்பட்ட இரத்தம் நிலம் முழுவதும் பரவியது. இப்படி எல்லாம் அழுந்திப்போன ஊரை அழுந்தியூர் என்று கூறுவர்.

குறிப்பு:- அக்காலத்து முத்தரையர்கள் வலிமை மிக்க பேரரசர் பக்கல் சேர்ந்து வாழ்ந்தனர். அக்காலத்தில் வலிமை மிக்கவர் பல்லவர் ஆதலின் அவரது இடபக் கொடியே இச்சுவரர் மாறனுக்கும் கொடியாயிற்றுப் போலும்.

தென்புறம்:

2. (ஒழுகு குருதி யுடனெப்ப) வோடிக்
கழுகு கொழுங்குடர் கவ்வ— விழிகட்பேய்
புண்ணளைந்து கையும்பர்ப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள்.

பகைவரோடு போர் நிகழ்ந்த மணலூரிலே, ஆறு போலப் பெருக்கு எடுத்து ஓடும் இரத்தத்துடன் தாமும் ஓடிச் சென்று, கழுகுகள் நன்கு கொழுத்த குடர்களைக் கவர்ந்து செல்லும்படியாகவும், இரண்டு பக்கங்களிலும் விழித்த கண்களை உடைய பேய்கள் மேல் இருந்து இறந்தோர் உடற் புண்களைத் துழாவும்படியாகவும், உலகத்தைத் துழாவிய சிறப்பும் பொருந்திய சுவரன்மாறனுடைய வாளாயுதம் வென்றது.

குறிப்பு:- இவ்வடைப்புக் குறிகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் கல்வெட்டில் சிதைந்து போயினமையால் சிதைந்த இடத்தை நிரப்புவதற்கு ஊகித்தமைக்கப்பட்டன வாகும்.

கோட்டாறினம் பெருமானுர் பாடின:

3. நிற்கின்ற தண்பணை தோன்றுந்தஞ் சைத்திறம்பா டிநின்றார்
விற்கின்ற வீரர்கள் ஊர்கின்ற இப்பிண குன்றுகள்மேல்
நெற்குன்ற யானை ... ...
... ...

மிக ஓங்கி வளரும் மூங்கில்கள் தோன்றும் தஞ்சையின் சிறப்பைப்பாடி நின்ற புலவர்கள், பகைவருடைய பிணங்களை

அடுக்கியதால் ஏற்பட்ட குன்றுகளின் மேல், வில்லில் வல்ல வீரர்கள் ஊர்ந்து செல்கின்ற, நெற்போரைப்போல் காணப்படும் யானைகளைப் பரிசு பெறுவர் என்பதாம்.

மேல்புறம்:

4. மறப்படை மீனவன் வல்லவன் பல்லவன்சே னைக்கன்று
புறப்பட மாறு பொருகளிற்று ... ...
... ...
... ...

வலிய படைகளை உடைய பாண்டியன், வல்லவனாகிய சுவரன் மாறனை உடைய பல்லவனின் சேனையோடு போர் செய்யப் புறப்பட்ட அன்று மாறுபட்டுப் போர் செய்த யானையின்......

வடபுறம்:

5. பால்கொண்ட செவ்வாய் விளையா மொழிப்பரு
வத்துமுன்னம்
வேல்கொண்ட மாறன் ....
... ...
... ...

தாய்ப்பால் குடிக்கும் சிவந்த வாயிலே உச்சரிப்பு நன்கு அமைந்த, மழலை நீங்கிய சொற்கள் உண்டாவதன் முன்னமேயே வேலைக் கையில் எடுத்துக்கொண்ட சுவரன் மாறன்...

கீழ்ப்புறம்:

6. எங்கை யளவிற்றே பாண இகல்வீக்கு
மங்கை செருவேல் மாவல்ல (மாறன்கை)
....
....

ஏ பாடுதலில் வல்ல பாணனே! மாறுபாட்டை மிகுவிக்கும் அழகிய கைகளையும் போரில் பயன்படும் வேலையும் உடைய குதிரைகளைச் செலுத்துவதில் வல்ல சுவரன் மாறனுடைய கைகள் எம் கைகளைப் போன்ற அளவை மட்டும் உடையன ஆகுமோ.

இரண்டாவது தூண் — வடக்கு உச்சி

பாய்ச்சில் வேள் நம்பன் பாடின

7. (அல்லிற் பிரிந்தா)ர்க்கே அல்லையாய்க் காலந்தான்
முல்லைக்காய் முற்படுமோ என்றென்று— வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேல்மாறன் கைபோலும்
காரைவாய்க் கேளேனே கண்டு

தலைவன் பிரிவின்கண் கார்காலம் கண்ட தலைவி காரொடு புலந்து சொல்லியது இப்பாடல்: ' இராக்காலத்தில் தலைவரைப் பிரிந்து வருந்தும் தலைவியர் பக்கல் பரிவுடன் நடந்துகொள்ளாமல், உன்னுடைய காலமாகிய கார்காலமானது முல்லைச் செடியை மலருவிப்பதற்கு மாத்திரம், உரிய காலத்திலும் முற்பட்டுத் தோன்றுமோ என்று வல்லத்தரசனுகிய, காரை என்ற ஊரில் போரில் பகைவர்களை வென்ற வேலை ஏந்திய சுவரன் மாறனுடைய கைகளைப்போலக் கைம்மாறு கருதாமல் உலகுக்குக் கொடுக்கும் மேகங்களைக்கண்டு கேட்காமல் இருப்பேனே?

மேல்புறம்:

8. வஞ்சிப்பூச் சூடிய வாளமருள் வாகைப்பூக்
குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன் — தஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந்தான்
தோளால் உலகளிக்கும் தோள்

வஞ்சிப்பூச் சூடிப் பகைவர்மேல் மாறுபாடு காரணமாகச் சென்று நிகழ்த்திய வாட்போரில் வெற்றிபெற்று, வாகைப் பூவால் ஆகிய மாலையை மயிர் முடியில் வாசனை வீசும் முடி மாலையாக அணிந்த கோமாறனும், தஞ்சை அரசனும், பிற விலங்குகளைப் பற்றிக்கொள்ளும் சிங்கம்போன்ற வலிமையால் கொடும்பாளூரில் பகைவர்களைக் கோபித்து அழித்தவனுமாகிய சுவரன் மாறனுடைய தோள்களே, உலகைக் காப்பாற்றும்தோள்களாம்.

கீழ்ப்புறம்:

9. எருவை புறஞ்செலாத் தோய்ந்தனவா லெங்கும்
வருபுனல்சூழ் வல்லக்கோ மாறன்— செருவில்
மறங்கூர்வாய்ப் பட்டா ருடல்குடைந்து மாந்திப்
புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள்.

எங்கும் ஆற்றில் வருகின்ற நீரால் சூழப்பட்ட வல்லத்து அரசனாகிய மாறனுடன் செய்த போரில் வீரம் நிரம்பிய இடங்களில் இறந்தவர்களுடைய உடல்களைக் குடைந்து வயிறார உண்டு, மீண்டும் கூரிய வாயலகுகளில் கொண்டு வெளிக் கிளம்பிய பறவைகளாகிய கழுகுகள் எங்கும் வெளிச்செல்ல முடியாதபடி இரத்தத்தில் தோய்ந்தன.

அடிப்பகுதி—வடபுறம்

10. பேரிலைப் பங்கயங் கூம்பப் பிறையின் குறுமுளைபோந்
திரிலை கொள்ளும் பதத்தில் இணையா ரரணமுட்டக்
கூரிலை ... ...
... ...

பெரிய இலைகளையுடைய தாமரைகள் குவிந்து கொள்ளும்படித் தோன்றுகின்ற பிறைச் சந்திரனைப்போன்று, சிறிய பிராயத்திலேயே பகைவர்களுடைய அரண்கள் முழுவதையும் கூரிலை வேலால் வென்றான்.

11. சொற்புகு தொண்டைக் கனிபுகு தூமதி போன்முகத்தாள்
பொற்புக வெற்புப் புகுதிகண் டாய்புக ழிப்பொருதார்
கற்புக விற்புகக் கண்டவன் கள்வர்கள் வன்றஞ்சை
நற்புக (ழான்கரம் போற்கொடை காலுங் கருமுகிலே)

கார்காலத்து வருவதாகக் கூறி வினைமுற்றி மீளும் தலைவன், தான் செல்லுவதன் முன் தலைவியின் ஊர்நோக்கி மழை பெய்யச் சென்ற கார்மேகத்தை நோக்கிக் கூறியது.

புகழி என்ற ஊரில் எதிர்த்துப்போர் செய்த பகை வேந்தர்கள் மலையில் ஓடி ஒளியும்படித் தன் வில்லின் திறலை வெளிப்படுத்தியவனும் கள்வர் கள்வன் என்ற பட்டப் பெயர் உடையவனுமாகிய தஞ்சையில் நல்ல புகழ் பெற்று ஆளுகின்ற அரசனாகிய சுவரன் மாறனுடைய கைகளைப் போலக் கைம்மாறு கருதாமல் கொடுக்கும் தொழிலை வெளிப் படுத்தும் கார்மேகமே! சொற்களைச் சொல்லும் தன்மை பொருந்திய கொவ்வைக்கனியை உடைய களங்கமற்ற சந்திரனைப்போன்ற முகத்தை உடைய என் தலைவி, நின் வரவால் 'கார்காலம் வந்துவிட்டதே, இன்னும் தலைவர் மீண்டுவரவில்லையே' என்ற எண்ணத்தால், அழகு அழியும்படி

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

SENDALAI

Sivakami Amman a closer view

நீ மலையை நோக்கி மழை பொழியச் செல்கின்றாயே இச்செயல் உனக்கு ஏற்றது அன்று என்பதை அறிவாயாக.

அடி—கீழ்ப்புறம்

12\. சேட்டிணர்பூந் தண்பொழில் செம்பொன்மா ரிக்க டியரணம்
மூட்டின சீற்றமு முன்சென் றதன்பின் பகட்டினத்தின்
... ... மாறன் கடிநகர்
... ...

பெருமை பொருந்திய கொத்துக்களாயுள்ள பூக்களை யுடைய குளிர்ந்த சோலைகளையும், சிவந்த பொன்னை மழை போல் செலவிட்டுக் கட்டிய அஞ்சத்தக்க அரண்களையும், கோபித்து அழித்த கோபமும் முன்னே நீங்கிவிட்டது; அதன்பின் யானைக் கூட்டங்களைக் கவர்ந்தான் சவரன் மாறன்; அவனுடைய காவல் பொருந்திய நகரம்......

அடி—தென்புறம்

13\. யனையைப் பகடுகூ டாவன்று பல்லவன்வெல் லத்தென்னன்
முனையைக் கெடச்சென்ற மாறன் முகிலிவளர் பீலியுந்தச்
சுனையச் சுனைமணிப் பாறையப் பாறைசொல் என்விளைந்த
வினையைப் (பறிப்பவன் திக்கி னிலங்கு புகழ்வனே)

போர் செய்த அக்காலத்தில் பல்லவன் வெல்லும்படி யாக அவனுக்குத் துணைபூண்டு பாண்டியனுடைய போர் முனையைக் கெடும்படிச் செய்தவனும் பகைவருடைய நல் வினையை அழிப்பவனும் எட்டுத் திக்கிலும் விளங்கும் புகழுடையவனுமாகிய சுவரன்மாறனுடைய முகிலி என்ற ஊரில் சுனைகளின் பக்கத்தில் தோகை வளர்ந்த ஆண் மயில் கள் ஆடும். அங்கே சுனையின் பக்கத்தில் மாணிக்கப் பாறைகள் இருக்கும். அப்பாறையில் என்ன விளையும் என்று கூறவேண்டுமானால் அங்கு வளர்ந்த பனை மரங்களை ஆண் யானைகளும் சுற்றி வளைக்கமுடியாது என்று கூறலாம்.

மேற்பகுதி—தென்புறம்

கிழார்க் கூற்றத்துப் பவதாய மங்கலத்து அமருண்ணிலை ஆயின குவாவங் காஞ்சன்பாடினபாட்டு மூன்றும் தூண் மேலன எல்லாம்

1. ஸ்ரீ தமராலயன், 2. ஸ்ரீ அபிமான தீரன், 3. ஸ்ரீ கள்வர் கள்வன், 4. ஸ்ரீ சத்ருகேஸரி.

மேற்பகுதி—கீழ்ப்புறம்

14. ஏறி விசும்பும் இருநிலமாய்த் தென்பரால்
மாறன் செருவேல் மறங்கனன்று—சீறக்
கொடிமாடத் தண்கொடும்பை கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு.

சவரன்மாறன் போரில் பயன்படுத்தும் வேல் வீரத்தால் அழன்று கோபங்கொண்டதால், கொடிகள் உயர்த்தப்பட்ட மாடங்களை உடைய அழகிய கொடும்பாளூரிலே போரிட்ட பகை மன்னரின் பெரிய மாடங்களைக் கொண்ட மதில்கள் இடிக்கப்பட்டதால், எழும்பிய புழுதி மேலே கிளம்பியதால், பூமியும் தேவர் உலகமும் ஒன்ருயிற்று என்று கூறுவர்.

வடபுறம்

15. எண்கி னிருங்கிளையு மேறற் கரியவே
வண்கை நெடுமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
சேய்நாடு தானூர்ந்த மாநாட கண்ணனூர்க்
கோநாடர் புக்கொளித்த குன்று.

ஆகாயத்தில் அளாவிய வானுகிய சேய்மை உடைய நாட்டினைத் தாம் ஊர்ந்த ஆண் யானைகளை உடைய நாட்டைக் கொண்டவனே! வரையாது கொடுக்கும் வள்ளன்மையுடைய நெடுமாறனுகிய உன்னுடைய வாளைக் கோபிக்கச் செய்து, கண்ணனூரில் நடந்தபோரில், மேதக்க நாடுகளை உடைய பகைவர்கள் ஓடிப்போய் உயிர் தப்புவதற்காக மறைந்த குன்றுகள், கரடிகளின் கருமையான சுற்றத்தாலும் ஏறிச் செல்லுதற்கரிய அருமையான உயரத்தை உடையன என்னலாம்.

மேற்புறம்

16. செருவலனு லதனுற் சிந்தியார் போலும்
மருவலராய் வாண்மாறன் சீறக் —— கருவிளை
கண் தோற்ற வண்டரவம் கார்தோற்ற காந்தளூர்
மண் தோற்ற வேந்தர் மனம்.

பகைவர்களுக்குத் துணையாகி வாள் ஏந்திய மாறன் கோபித்ததால் முன்பு கண்களுக்கு உவமையாய் இருந்த அப்பகைவர் நாட்டுக் கருவிளை கண்களுக்குத் தோல்வியுற்றன. முன்பு காராகிய மேகத்துக்கு உவமையாயிருந்த வண்டுகள் மேகங்களுக்குத் தோல்வியுற்றன. காந்தளூரில் மாறனல் எதிர்க்கப்பட்ட அரசர்களுடைய மனம் தத்தம் நாடுகளைத் தோற்றன. இந்தச் சுவரன்மாறன் போராடுவதில் அத்துணை யளவு ஆற்றல் சான்றவன். அதனுல் பகைவர்கள் அவனுடைய பெயரையும் நினையார்போலும்.

அடி—தென்புறம்

17. மலர்ந்ததார் வாண்மாறன் மண்ணண்ணல் வாயில்
கலந்தநாள் காணலாம் காண்க —— உலந்தவர்தம்
எண்பருந்து சூற்பேய் இருந்துறங்க வீழ்குடர்கள்
(புண்ப)ரந்து சிந்தும் புறம்.

மலர்ந்த மாலைகளை அணிந்த வாள் தொழிலில் வல்ல மாறனுகிய மண்புரக்கும் மேதக்கவனும் சுவரன்மாறன் போரிடத்தில் பகைவரைக் கைகலந்த நாளன்று, இறந்து போனவருடைய அறுப்புண்டு வீழ்ந்த குடர்கள் புண் நிரம்பிக் கீழே சிதறிக் கிடக்கும் இடமாகிய போர்க்களத்தில் பல எண்ணிக்கையுடைய பருந்துகள் இருக்கவும் அஞ்சத்தக்க பேய்கள் உறங்கவும் காணலாம். ஆதலின் எல்லோரும் சென்று காண்க. அண்ணல் வாயில்—சித்தன்னவாயில், அவ்வூரில் நிகழ்ந்த போர் என்க.

அடி—மேற்குப்புறம்

18. தாழும்புயற்றிங்க ளூர்த்தேவர் மானந் தளரத்தென்னன்
வேழங்களப்பட் டதுகண்ட வேந்தன்மன் பூமலராள்
வாழுந் தடவரைத் தோணெடு மாறன் ... ...
... ...

மேகங்கள் தங்கியிருக்கும் திங்களூரையாண்ட திங்களூர்த் தேவர் என்பவருடைய மானம் கெடும்படிப் பாண்டியனுடைய பட்டத்து யானையைப் போர்க்களத்திலே கொன்று வீழ்த்திய அரசனும், நிலைபெற்ற திருமகள் எப்பொழுதும் தன்னிடத்திலேயே தங்கியிருக்கும்படியான பெரிய வாகுவலயங்களை யணிந்த தோள்களையுடையவனுமாகிய நெடுமாறன் என்னும் பெரும்பிடுகு முத்தரையன்.........

அடி—வடபுறம்

19. நாகங்கண் டஞ்சவென் னெஞ்சங்கல் லென்னவொல் லெனக்கடனீர்
மாகங்கொண் டேறிவரத் தாத்தன்மா றன்றுமெங் கோன்வென்று
மாகங்கொண் டானென ... ...
... ...

எட்டுத் திக்கிலுமுள்ள எட்டுக் குலமலைகளும் அஞ்சும்படியாகவும் ஆச்சரியத்தால் என்னுடைய மனம் கல்போல் உணர்ச்சியற்றதாகும்படியாகவும் விரைவாகக் கடலிலுள்ள நீர் சந்தோஷத்தால் பொங்கி ஆகாயம் வரை ஏறி வரும்படியாகவும் தாத்தன்மாறனாகிய எமது அரசர் பெருமான் பகைவர்களை வென்று தேவலோகம் வரையில் எட்டும் புகழைப் பெற்றான்......

அடி—கீழ்ப்புறம்

20. நின்றடு வில்லவன் வல்லரண் பல்லவன் செந்தோளெனச்
சென்றீடு சீர்த்தி

தன் எதிரே நின்று போர் செய்யும் சேரனுடைய பகைவர் கவர்தற்கரிய வலிய அரணத்தைப் பல்லவ அரசனுடைய தோள்களைப்போலச் சென்று அழிக்கும் சிறப்பையுடைய.........

நான்காவது தூண்—ஆசாரியார் அநிருத்தர் பாடியன :

மேற்பகுதி—கீழ்ப்புறம்

21. பாமருவு கின்றயாழ்ப் பாண்மகனே பண்டெல்லாம்
யாமறிதும் எங்கையர்க்கே சொல்லுநீ —— மாமரங்கை
தென்னுடர் காதலியர் தீநாட வாய்சிவந்த
மின்னுடு வேல்மாறன் மெய்.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Birudas of Mutharaiya Chief–Perumbidugu Mutharaiyar
alias Suvaran Maran

யான் பரத்தைமை உடையேன் அல்லேன் என்று தலைவன் தெளிவிக்க முயலவும் தெளியாது ஊடி நின்ற தலைவியை ஊடல் தீர்க்க வாயிலாகப் புக்க பாணற்குத் தலைவி சொற்றது.

பாட்டுப் பாடுவதிலேயே பழகுகின்ற யாழ் வாசித்தலை உடைய பாணனாகிய மகனே! மாமரங்கை என்று ஊரில், தென்னாட்டையாண்ட மன்னர்களது மனைவிமார்கள் தம் கணவர்கள் இறந்த பின்னை உயிர் வாழ விரும்பாது தீக் குளித்தலை விரும்பும்படி வாய் சிவந்துள்ள ஒளிமிக்க வேலை ஏந்திய சுவரன்மாறனாகிய என் தலைவனின் உண்மையை முன்பிருந்தே நாங்கள் அறிந்திருக்கிறோம். என் தங்கைகளாகிய பரத்தையர்களிடமே இத்தகைய செய்திகளைக் கூறுவாயாக.

தென்புறம்

22. போலரசு பிறவா (தோன்றா?) பிறநெடு மேருநெற்றி
பொன்போல் பசுங்கதிர் ஆயிரம் வீசும்
பொற்றேர் பருதிக்கென் போத விடுமே
இணைச்சோதி வீயு விசும்பே.

மேருமலையின் உச்சியிலே, பொன்னைப்போன்ற ஒளிவிடும் கிரணங்கள் ஆயிரத்தை வெளிப்படுத்தும் பொன்னாலாகிய தேரை உடைய சூரியனை ஒத்த இத்தலைவனுக்கு, இவனைப் போன்று மேம்பட்டவேறு அரசர் யாரும் தோன்றப்பெறாத, சூரிய சந்திரர் தோன்றி மறையும் தேவருலகம் யாரை உவமை கூறமுடியும்?

மேற்குப்புறம்

23. ... ...
மண்டீது கண்டான்தஞ் சைச்செம் புலநாட்டு வெண்கோடல்
விண்டபோது கொண்டாயர் மலையப் புதுமணல் மீதுசெந்தீத்
தண்டுகண் டாலன்ன கோவங்க ளூர்கின்ற தாழ்புறவே

......பகைவருடைய நாடுகள் அழியும் நிலை அடைதலைச் செய்த சுவரன்மாறனுடைய தஞ்சையை அடுத்த சிவந்த

நிலையுடைய நாட்டிலே வெண் காந்தளின் மலர்ந்த பூக்களை ஆயர்கள் சூடிக்கொள்ள அங்கு ஆறுகளால் அடித்துக் கொண்டு வரப்பட்ட புது மணலில் சிவந்த நெருப்பின் தகடுகளைக் கண்டாற்போல இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்லும் தாழ்ந்த முல்லைநிலப் பகுதியைக் காணலாம்.

தென்புறம்

24. தனமுத லாயமும் பூவையுந்தன் கைக்கிளையும் முன்விட்டு
எனமுத லன்புமென் னுகைச்செய் தானியக்கத் தைவிண்டார்
வனமுதல் சாரக் கருங்கைப் பகடுய்த்த மாறன்தெவ்வர்
கணமுதல் ... ...

தனது பகைவர்கள் காடுகளுக்கு ஓடும்படியாகத் தனது வலிய துதிக்கையையுடைய யானையைச் செலுத்திய சுவரன் மாறனுவான், தனது முற்பட்ட சிறப்பையுடைய அமைச்சர் முதலிய குழாங்களும், தன் கோப்பெருந்தேவியும், தன் பக்கலிலுள்ள சுற்றத்தவரும், என்முன் தன் செவ்வி நோக்கியிருப்பவும், அவர்களை விட்டு, மிக எளியனுகிய என்னிடத்து அன்பை எப்படிக் காட்டினுன்!! அவன் எம்மிடம் காட்டிய அன்பை எங்ஙனம் பாடுவேன்? என்றபடி.

[T. V. G.]

செந்தலைக் கல்வெட்டுக்கள்

ஒரு சில

Inscription No. 1.

(A. R. No 56 of 1897)

Eulogy on TIPPARAJA

श्रवणे दिशति सहस्त्रं
दृक्पाते दश सहस्रघनमालम् ।
सल्लपितेत्वपरिमितं
संतोषे किं वदामि तिप्पेन्द्रः ॥

गोपुरमंतः पुरमपि
नूपुरमपि नैव विद्विषाम् ।
सहसे श्री तिप्पनृपते
त्रिपुरांतक नाम तेन ते सार्थम् ॥

गोपेंद्रं तिप्पभूपाल
कीर्ति कान्ता घनोरसि ।
ब्रह्मांडानि सदा हार
मौक्तिका........... ॥

*1 காதால் கேள்விப்பட்ட சமயத்தில் 1000த்தைக்கொடுக்கிறார்
கண்ணில்பட்டால் 10 ஆயிரத்தை அளிக்கிறார்,
ஸல்லாபம் செய்தால் அளவற்றதை அளிக்கிறார்
சந்தோஷமேற்பட்டால் எவ்வளவு கொடுப்பார்
என்பதைப்பற்றி
யான் என்ன கூறுவேன் (திப்பராஜனே!).*

2 தாங்கள், சத்ருக்களின், கோபுரவாயிலேயும், அந்தப் புரத்தையும்,
(எதிரிஸ்திரீகளின்) பாதச்சிலம்புகளேயும் பொறுப்பதில்லே. இதனுல் **திரிபுராந்தகர்** என்ற தங்கள் பட்டமானது பொருத்தமுள்ள அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

3 ஹே கோபேந்திர **திப்பபூபாலரே,** தங்களுடைய புகழானது சர்வலோகங்களிலும் வியாபித்து, தங்கள் மனைவிமார்களின் மார்பிலுள்ள முக்தாஹார மாகவும் பரிணமித்து இருக்கிறது.

Inscription No. 2

Second Gopuran - Sundareswarar **Temple.**

A. R. No. 57 of 1897.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11.] ... ... த்திகள் ஸ்ரீபோசல வீர ராமநாத தேவர்க்கு யாண்டு 10-வது கற் கட க நா (யற்று)

2 த்து [ஏ] கா தசி .... யும் பெற்ற உரோசணி நாள் பாண்டி குலாசனி வள நாட்டு விளா நாட்டு உடை.........

3 லே க்காவு ற .... [திரு] வெண்ணுவல் [கி] ழ். இனி தமர்ந்தருளிய திரிபுவன பதிக்கு மூல ப்ருதயராகிய ஆ.........

4 ரதேவர் கங் [மிகளு] .... தேவ தானம். இந்நாட்டு ஆர் [கா] ட்டுக் கூற்றத்து .... ஆழிங்குடியில் ஆழிங்குடையா ....

5 வாயிலுடையார்க்கும் பலகையில் அரிசி விடு............ நாயமாரில் தங்களுரில் உடையார், காக்கு நாயகர் ....

Inscription No. 3

Stone built into the floor – First Prakara.

(A. R. No. 58 of 1897)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11] —

2 கோ இராஜகே —

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Inscription of Suvaran Maran-Genealogy of the Mutharaiyars.

3 ஸ (ரி) பர்மக்கு
4 யாண்டு 17
5 ஆவது நங்கை
6 ஒளி மதியார் தா —
7 யார் நக்க னீலி
8 ஒரு திருவ மிது
9 க்கு வைத்த பொ —
10 [ன்] 10 ௨ * இப்
11 பொன் கொண் —
12 டு கட வொம் வ —
13 வ ட வா ச் சாலைப்
14 [பெ] ரு மக்க ளெ [ா]
15 ம் இப் பொன்னு —
16 க்குப் பலி
17 [சை] நிசதி குறுணி
18 நெல்லால் ஒ —
19 ரு திருவமிது
20 இது செலுத் ... ...

Inscription No. 4.

North wall — Central shrine.

(A. R. No 59 of 1897)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பர கெஸரி வம்மக்கு யாண்
2 டு 4 — ஆவது ஆ [ர்] க் காட்டுக்கூற்றத்துப்ரும்மதேய—
3 ம் சந்தரலே (கை) சதுர்வேதி மங்கலத்து
திருப்பெருந்துறை
4 மஹா தெ வர் க் [கு இவ்] வூர் வைத்ய [ஞ] த
கோமபுறத்துகாம
5 [க் கோடி க்ர ம வித்த] ஞை உத்தமசித்த பிரம்மாதி
6 ராஜன் வைத்த பகல் விளக் கொன் [றிற்] க்கு
வைத்த ஆ —

---

* ௨ கழஞ்சியின் அடையாளம்.

45

7 டு சந்ராதி [த்*] தவற் சாவா மூவா ப்பேராடு நாற்ப-

8 (ப) த்தைஞ்சும் இவனே தேசவிடங்கர் பூண்

Inscription No. 5.

North wall

(A. R. No. 60 of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11*] கொலோத்துங்கசொழதெவற்கு யாண்டு நாற்—

2 பத்து நாலாவது பாண்டி குலாசனி வள நாட்டு ஆற்கா —

3 ட்டு கூற்றத்து ப்ரும்மதே யம்.............. ச் சருப்பெதி -

4 மங்கலத்து திருப்பெருந்...........டைய மா தேவற்கு

5 சனி தொறும் திருவெண்ணை [க்காப்பு] சார்த்தி அருளவும் அமு-

6 து செய்தருளவும் சனி ஒன்றுக்கு என்னை உழக்கும் அரி—

7 சி நா நாழியும் கறியமுது உட்படவும் நெல்லு..............

8 ....நா நாழிக்கு உ [ள்ளூர்] தேவ தானத்தில் பல திடவி

9 ல் கல்வி கணவதி மயக்கலில் கிழக்கடைய விட் —

10 ட நில [ம்*] அரை மா முந்திரி கைய்க்கும் ஊர்க்காலால்

11 தூணிப்பதக்கு நெல்லு இறுத்து இதில் இறைமி

12 கு தி கொண்டு எண் ணைக்காப்பு சார்த்தி அமு[து][*]செ-

13 ய் தருள இந்நிலந் திருத்தி விட்டேன். வடகரை

14 ஜய தர புரத்திருக்கும் சங்கர பாடியான் படி—

15 ய சோலை அரைசான குலோத்துங்க சொ—

16 ழ மாயிலட்டியேன். பன் மா யெ சுர இர [க்*]

17 ஷெ ஷெ க்ஷ

Inscription No. 6.

North wall

(A. R. No. 61 of. 1897.)

1 ஸ்வஸ்திஸ்ரீ [11*] கொ ராஜகெஸரிவன்மக்கு யாண்டு 2வது ஆற்காட்டுக்கூ [ற்*] றத்து

2 பிரும்மதேயம் சந்தர லெகை சதுர்வே திமங்கலத்து திருப்பெரும்துறை மகா தேவர்க்கு
3 ஏய் ஞட்டு கடம்பூர் உடை(ய்)யான் காளிகெச(ன்)னும் காளி மாற(ன்)னும் காரி திரு வெண்—
4 காட் [ட] டிக(ள்)ளும் இவ்வனை வோம் கடம்பூர் உடை(ய்)யான், காளி காரிக்கு ஆக வைத்தவிள[*]க்கு-க-
5 ஒன்றுக்கு வச்ச பொன் 15-ꯖ* இப்பொன் பதி (ன்) ஐங்கழைஞ்சின் பலிசையால் நிசதம் உழ —
6 ழு நெ(ய்)யால் ஒரு நொந்தாவிளக்கு சந்தராதித்தவல் எரிப் பொ(ம்)மா நொம் இத்திரு (கொயி) —
7 (ல்)(லு)டை யொம் எங்கள் முறைநாளால் எரிப்பொமா னேும் ஸபையும் பன்ம (ா*) ஹேஸ்வரரக்ஷை (11*)

Inscription No. 7

North wall

(A. R. No. 62, of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11*) கொராஜ கெஸரி வன்மக்கு யா(ண்)டு 3-வது ஆர்க்காட்டுக் கூற்ற(த்)
2 து ப்ரும்மதே யம் சந்தரலெகை சதுர்வே திமங்கலத்து திருப்பெருந்துறை ம ஹ (ா*) தெ —
3 வர்க்கு திருமங்கலத்து காலாவன் சேந்தன் நந்தியேன் உடை —
4 மை யர் பகவன் சக்தி பெராலும் முன்நூற்றுவன் (பெ)தச விடங்கன்பெராலு —
5 ம் கிடக்கும் கையெழுத்தோலையால் கடவ பொன்னுலும் நெல்லாலும்
6 ஏற்றி வந்த பொந் முதல் 30 ꯖ இப்பொன் முப்பதிந் கழைஞ்சிந் பலி —
7 சையால் நிசதம் உழக்கு நெ(ய்) யால் ஒரு நொந்(தா) விளக்கு சந்தராதி த்த வல் எ —
8 ரிப் போ மா நே(ா)ம் இவ்விரு வோம் ஸபையு(ம்) பன்மா ஹேசுவரரக்ஷை

ꯖ* கழஞ்சியின் அடையாளம்.

nscription No. 8. West wall

(A. R. No. 63 of 1897)

1 கோராஜ கேஸரி வன்மாக்கு யாண்டு (9)ஆ(வது) ஆர்(க்) காட்டுக் கூற்றத்து பிரும்மதேயம் சந்தரலேகை
2 சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி ஸபையோம் இவ்வூர் ஐ—
3 ம் பத்து மூன்றுங் குடும்பில் ஹாரத பங்கு கொயிலாங் நாகனந்தி விற்ற பங்கு — க-இ
4 வ்வொரு பங்கும் இவ்வூர் பிரும்மஸ்தா நத்துமீய் செங்கிளி நாட்டு வெண்ணுயிலுடை—
5 யான் வயிர(ம்)மெக(ம்)படாரன் எடுப்பித்த அம்பலத்து இருந்து நிசதியும் ஸ்ரீ —
6 பாரதம் வாசிக்க பெரும்புலியூர் ஆத்ரேயகோத்திரத்து வைகாநஸ ஸூத்ரத்துசி (ங்கி)
7 நந்தீசுவரபட்டனுக்கு இறை இலியாக குடுத்தொம்ஸபையொம் இவ நிலம் பி
8 ன்பு இப்பங்குண்பார் இவ்வூர் பிரம்மஸ்தா நத்தே இருந்து நிச தியும் ஸ்ரீ பாரதம் வாசி—
9 த்துண்பதாக இப்பங்கொன்றும் சந்த்ரா தித்தவத் இறை இலியாக பணித்து கல்மேல்
10 வெட்டி குடுத்தொ(ம்) பெருங்குறிஸ பையோம்.

Inscription No. 9.

West wall

(A. R. No. 64 of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11) திருமன் னி வளர இரு நில மட —
2 ன்தெயும் ெ(பா)ர்ச்சயப் பாவையும் சிர்த்த நி
3 (ச்) செல் (வி) யு (ம்) தெங்பெருங்தேவியர்(ந)ாட இங்பு
4 ற நெடுதிய ஊழியுள் இடைதுறை நாடும் து —
5 டர் வன வெலிப்படர் வன வ(ா*)சியும் சுள்ளி (ச்)
6 சூள் மதிள் க் கொள்ளி ப் பாக்கையும் நண்ணர்க் (க)
7 (ரு) முரண் மண்ணை க்க (டக்க *) மும் பொருகடல் ஈ(ழ) த்தரை(யர்)
8 (தமுடியு)ம் அங்கவர் தே(வியரே)ாங் கெழில் முடி(யும்)மு—
9 ந் நவர் பக்கல் தெ(ந்) நவந் வைத்த சுந்தரமுடியும் இந்திர நாரமும் தெ —

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Inscription of Nandivarman III who won a victory over the enemy on the banks of the river **Tellaru.**

10 ண்டி (ரை ஈ) ழ மண்டலமுழுவதும், எறிபடைக் கொளர் முறை மயில்

11 (சூடு) ம்குல (தன)மாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்(க)

12 திர் வெ (லை)………ல் பெருங்காவல்ப் பல் பழந்தீவும் செருவில் ச் சினவில் இரு பத் [தொ] —

13 ரு (கால்) அரை சு (கலை) கட்ட பரசு ராமந் மேவருஞ் சாந்தி மத்தீ வரண் கருதி இரு(த்தி)—

14 ய செம்பொற்(திரு)த்தகுமுடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் மு(து)

15 ………சிங்(கந)ளப்பரம் புகழொடு மடியில் இரட்டபாடி எழரை இ—

16 ………நெதி (கு)லப் பெருமலைகளும் விக்ரமவீரர் சக்கர கொட்டமும்

17 ………காமிடை வள(ர்*)நாமணை க்கோணையும் வெஞ்சி

Inscription No. 10.

South wall, Central Shrine

A. R. No 6 of 1899.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11) பாண்டியன் தலைகொண்டகோப் (பரகேஸ)ரி வன்ம(ர்)க்கு யாண்டு

2 4-ஆவது ஆற்க்காட்டு கூற்றத்து ப்ரும்ம தேயம் சந்த்ரலெ கை சதுர்வேதி மங்கலத்து) திருப்பெரும்—

3 துறை மஹாதேவர்க்கு பெருவளத்து கொடன் தூர் நாராயணன் குமார ச(ர்ம்ம)ன் சந்த்ராதி (த்)த

4 வல் நிசதம் ஒரு படி (படி) எண்ணையால் மூன்று சந்தி (யு)ம் விளக்கெரிப்பதற்கு

5 குடுத்த நிலம் **ஆதித்தவதிக்கு** கிழக்கு 6—ஆங்(கண்)ணு (ற்)று சந்தரலெகை

6 (வாய்க்கால்)லுக்கு வடக்கு க—சதிரத்து மேக்கடை……… வில வடக் கடைய கு (மி)—

7 …ஆரிதன் கந்தன் மாதேவன் பக்கல் (விலைகொண்டு) டைய

8 ல் தெற்கடை மாச்சேயின் போகத்தல் எரிப்பதாகவும் (நி)

9 ன்ற 4-மாவின் போகத்தில் ஸ்ரீ கோயில் கணவதியார்க்கு
10 திங்கள் (தோ)றும் உத்திர(த்)திந் நான்றுநாழி அவலும் ஒரு தேங்காயும் அமு—
11 து செய்வ தாகவும் மிக்கிது கொண்டு சித்திரை உத்தர (த்)திந்நான்று அமுது
12 செய்வதாகவும் இதுல டையு(ம்) பன்மா ஹெ சுவரரும் ரகெக்ஷ

Inscription No. 11.

Wall — Outer Gopura.

A. R. No. 7 of 1899.

1 ஸ்வஸ்திஸ்ரீ (11*) கோப்பர கெஸரி வர்மற்கு யாண்டு 10வது க —
2 **ற் குடிப்பள்ளியுடைய** ஆரம்பவீரனேன் கையெழுத்து **வடகவிர** நாட்டு
3 பள்ளியுடைய கனக (ஸெ)ன படாரர் கைய்யால் யான் கொண்டு கடவ (ச)ழ.........
4 இக்காசு நூற்றைம்பதுங் கொண்ட பரிசாவது காசின் வா(ய)ப்பூவழி கலநெல்லு.........
5 பொலிந்து கார்ப்பலிசை 150 — ஈ (கலத்தைக்குறிப்பது) நூற்றைம்பதின் கலமுந்......
6 இவ்வூர் **வீர சிகாமணிப்பேரேரிக்கு** அட்டி கல்லு விப்பதாகவும் —
7 ய் 150 — ஈ நூற்றைம்பதின் கலமும் இவ்வாட்டைச் சித்திரை.........
8 யு மட்டி கல்லுவிப்பதாகவும் இவ்விரண்டு பலிசையுமெற்றி வந்த நெ.........
9 கல நெல்லு மறவட்டி ஆட்டை வட்டமும் வீரசிகா மணிப்பெரெரி க ....
10 டென். இப்பள்ளியுடைய ஆரம்ப வீர னென் வட கவிர நாட்டு———

1 ——— பலிசை நெல்லும் இவ்வீரசி———
2 ——— ள்ளியுடைய கனக ஸெனபடார ———

3 ——— பரகெஸரி வர்மற்கு யா———

4 ——— (ணி)யுடைய ஆரம்ப விரனென் ———

5 ——— ய கனகஸென படாரர் கைய்ய ———

6 ——— கொண்ட பரிசாவது காசின்வாய் ———

7 ——— ண்டு பலிசையு மெற்றி வந்த ———

8 ——— முற் பக்கத்து ஸ்ருதமந்த்ர ———

Inscription No. 12.

Right of entrance–Vigneswara Shrine

A. R. 8 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீஸ்ரீ ம
2 து சாயண
3 உடையாற்
4 கு அஞ்சா
5 வது சந்தி
6 ர ரேகையி
7 ல் திருப்பெரு
8 ந்துறை உடைய
9 ார் கோயிலி
10 ல் பிள்ளைய
11 ார் கோயில்
12 திக்கம நாயக்
13 கர் மகன் அ
14 ன்னமா நாய
15 க்கர் தன்ம
16 ம்.

Inscription No. 13.

Left of entrance Vigneswara Shrine

A. R. No 9 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமா
2 றஞ் சடையற்குய
3 ாண்டு 19 ஆவது தி
4 ருப்பெருந்துறை ம
5 ஹா தேவர்க்கு கரிக்கு
6 டி சாந்தோ கரணி நாரா
7 யணன் மாறன் ப்ராஹ்ம
8 ணி நீலி நாரணி பக
9 ல் விளக்கு எரிப்ப
10 தாக வைத்த பொ
11 ன் எண் கழஞ்சு
12 இப்பொன் கொ
13 ண்டோம் இத
14 ன் பலிசையால்
15 பகல் விளக்கு
16 எரிப்போமா
17 னோம். திருப்பெ
18 ருந்துறை திரு

SENDALAI

CONNEMARA PUBLIC LIBRARY
DEC 1958
MADRAS



Inscription of the 9th year of Rajakesarivarman, (alias) Aditya I i. e. 880 A. D. It makes provision for the expounding of Sri Mahabharatham by making a gift of one **pangu** in the 53rd **Kudumbu** (i. e. ward) of **Chandralekhai - Chaturvedimangalam** (modern Sendalai).

17 லை கொ
18 ண்டு நிச
19 தி முக்கு
20 ருணிநெ
21 ல்லாக
22 ஒரு திரு
23 வமிதினு
24 க்கும் ஒ
25 ரு நொந்
26 தா விளக்
27 கி னுக்கு
28 ம்
29 வச்சநி
30 லம் மா
31 ளி கை
32 உடையா
33 ன் வே
34 வி இது
35 காத்தா
36 னடி எ
37 ன் தலை
38 மேலி
39 ன

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Inscription No 16.

IV Pillar — Mantapa.
A. R. No. 13 of 1899.

1 ஸ் வஸ்தி ஸ்ரீ கோராச
2 கேசரி பந்ப ற்கு யாண்
3 டு யஅ (18) நியம
4 மாகாளத்து
5 ப் பிடாரியா
6 ர்க்கு ஒரு
7 நொந்தா
8 விளக் கெ
9 ரிப்பதற்கு
10 மாறம்
11 பாவை வ
12 ய்த்த பொ
13 ன் 12௳ (கழஞ்சு)
14 இப் பொ
15 ன் பன்னிரு
16 கழஞ்சு
17 க
18 — தற்குத்
19 துத்திரி
20 இட்டெரிப்
21 பதாக இ
22 ப் பொன்கொ
23 ண்டோம்
24 பிடாரியா
25 ....
26 ....
27 நன்றிமாதே
28 வனுந் நன்
29 றி எழுவனு
30 நந்தவன
31 க்குடி சிறப்
32 பனுர்.

Inscription No 17.

South wall - Central shrine

A. R. No. 14 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரையும் ஈழமும் கொண்ட கோபரகேசரி பன்மற்குயாண்டு.

2 (ம)ஹா தேவர்க்கு இவ்வூர் அம்பர் நாட்டு பட்டராகிய திருக்கடவூர் காச்சுவன் புவனசேகரன்......

3 சாங் கண்ணுற்றுக் **கடுங்காளுக்கு** தெற்கு முதற் சதிரத்து வடக்கடைந்த நான்மா வரையில்மே.

4 கம் கொண்டு சந்திராதித்தவற் பெருந்திரு வமுது செய்ய குடுத்தேன். புவனசேகரன் மாற...

5 த்து சபையோம் இது சபையும் பன் மாஹேசுவரரும் ரக்ஷை.

TIRUKALUKKUNRAM

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



The flight of steps leading the sacred hill of the Kites



A well-planned village.
Village with the Bakthavatsala temple at the foot of the hill.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Our Excursion to Mahabalipuram & Ginjee

[N. Jayaraman IV-B]

Mahabalipuram and Ginjee!! Two names to conjure with! I fell an easy prey to ecstasy as I became a member of the excursion party. When the day of departure approached, I was on pins and needles with excitement. The opportunity has come for me to visit places rich with monuments, paintings and inscriptions that portray the ancient civilization of our land.

On the 6th of January '52 the party consisting of 70 pupils and 5 teachers left for Madras by the evening train The Headmaster, Sri S. R. Balasubrahmanya Ayyar. was our leader. We reached Madras on the morning of the 7th and we were welcomed by some distinguished people who graciously looked after our comforts. The first place we visited was Lady Sivaswamy Ayyar High School for girls, our sister institution at Mylapore.

The same day we started by bus for Thirukalukunram, the historic rock, situated some forty miles south of Madras. From the bus we were delighted to see the vast expanse of the green plains which served to feed thousands of cattle in and around Madras. At Thirukalukunram we climbed the hill and saw the temple. The skill shown by the sculptors in carving out rocks and making life-like statues, is to be greatly appreciated. We were thrilled to observe the two Holy Eagles flying away after accepting food from the hands of the temple Priest!

Next we reached Mahabalipuram, on the sea coast. Under the able guidance of our Headmaster, we saw and appreciated the marvellous skill exhibited by the sculptors of the past. The place is a veritable store of ancient treasures that enabled us to understand the civilization of

the 'Pallava Dynasty'. The paintings, the rock cut temples and the Pagodas on the sea-shore form a sight for the Gods to see. From the inscriptions found there, we learnt that the Pallavas were much devoted to Lord Siva, and that Sanskrit was fully recognised during their reign. The story of Bagiratha's penance so wonderfully carved on the rock compels our admiration and reverence.

The shore temple is guarded by a gigantic wall against which the turbulent waves of the sea dash and get scattered. This was a glorious spectacle whose beauty enticed me so much that we felt reluctant to get away from the place.

Mahabalipuram affords relief to thousands of troubled minds. The Pallavas gifted with marvellous and super-human skill, constructed many temples which will remain for all ages to come and speak volumes about the past glory of our country. The indelible imprints of the Pallava dynasty are found in the sands of time. The sun set. The day drew to a close. The sky was cloudy. Luckily our bus moved at top speed and we reached Madras before rain that threatened to overtake us. The day ended, providing us with amusements and information to be treasured for many years to come.

On the morning of the 8th, after a rather heavy breakfast, we all hurried to see the steamship, JALAGOPAL, at the quay. It was then being overhauled and we derived strange pleasure as we went and saw all parts of the steamer. Next we went to the Gemini Studios. Many objects attracted our attention. We were, however, sadly disappointed when we were not accorded permission to see the actual shooting of a scene. We saw the High Court and the Light House, the Museum and the Zoological Gardens. At the Park Fair Exhibition, attractive objects arrested our

MAHABALIPURAM

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



The Shore Temple

The **Dvayasthamba** (flag post) of the shore temple dashed by the waves of the sea

attention. In one corner, a sandow demonstrated some gallant feats, in another, boxing and wrestling matches took place. The Exhibition afforded us some merriment. The office of the 'Hindu' was next visited. The visit is worth remembering for its great educational value. We clearly saw for the first time how great and well-known newspapers are printed and despatched to readers.

The same night we left Madras for Tindivanam wherefrom we proceeded to Gingee. The famous fort with the gigantic walls all around reminds us of the regal dignity of the great chief, Dei Singh. The Fort stands to-day as a lasting tribute to the wonderful skill of the eminent engineers who had constructed it. In our enthusiasm we did not mind the difficulties that had to be overcome while climbing the hill. Up we went, slowly but steadily, observing all the beauty spots on either side. We went up to the Kalyani Mahal. It was a nice building. The huge statues of Ragunatha and Hanuman are still green in my memory. The bridge joining two rocks is indeed a grand sight, the crossing of which was a thrilling experience to us. At noon that day, we descended and took rest at the foot of the hill for some hours. The excursion was practically over.

By midnight we left Gingee for Budalur. The return journey was easy and quite comfortable. We reached Budalur on the morning of the 10th January 1952. It was a successful trip. We immensely e n j o y e d it. Nothing untoward happened to mar its excellence. It is difficult to describe the beneficial effects of the tour on the members of the party. What else can we expect of such useful, interesting and highly instructive excursions?

எமது இன்பப் பிரயாணம்

[E. R. சீனிவாசன் VI-A]

வங்காள விரிகடலின் வண்ணத் திரைகள் எங்கள் எண்ணத் திரைகளை எழுப்ப வருவனபோல் எழும்பி வரும் இன்பக் காட்சியும், கடலின் வண்ணத்தைக் கடன் வாங்கிய நீலக் கார் முகிலைக் கிழித்து நெடும் பகலைக் கொணரும் ஆதவன் ஆகாய உச்சியை அடைய முயலும் மாட்சியும், மருத நிலத்து மாணவர்களாகிய எங்களை 'மலைவளம் காணவருக, கண்டு களிக்க' என்று குறிஞ்சி நிலக் கிழவரொருவர் குளிர் பானம் கொடுத்துக் குகனைக் காண்க என்று கூறிய நேர்த்தியும், உண்மையிலேயே எங்கள் உள்ளத்தில் எண்ண அலைகளை எழுப்பி இன்ப உலகிற் கழைத்துச் சென்று மெய்மறக்கச் செய்துவிட்டனவென்றால் அது மிகையாகாது. மெல்லிய தென்றல் மெதுவாக வீசியது, அந்த நிலையில் மெய்மறக்கவேண்டிய நாங்கள், சூரியனின் வெம்மைக் கஞ்சி சுகந்தேட முற்பட்டோமென்றால் அதற்குக் காரணம், நூற்றுக்கணக்கான அடிகட்கு மேல் திருக்கழுக்குன்றத்தின் சுற்றுப்புற மதிள் பின்புற வாயிலில் நின்றதேயாகும்.

ஜனவரி ஐந்தாம் தேதி சகமாணவ நண்பர்களோடும், பள்ளியாசிரியர் பலரோடும் காட்டுப் பள்ளியை விட்டுக் காரில் பூதலூர் வந்ததும், பூதலூரிலிருந்து புறப்பட்ட புகைவண்டி, சென்னை எழும்பூரைச் சேர்ந்ததும், மறு நாட்காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு மயிலாப்பூர் மகளிர் பள்ளியிலிருந்து திருக்கழுக்குன்றமடைந்தது மாகிய பலவும் எங்கள் கவனத்திற்கு வரலாயின.

சென்னை உயர் மன்ற நீதிபதி பி. என். இராமசாமி ஐயரவர்களின் பேருதவியே, நம் பள்ளியின் கருத்தாவாகிய சர். சிவசாமி ஐயரவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் பேருபசாரத்துடன் தங்குவதற்கும், பிரிந்து செல்லுங்கால் பேரூர்தி (Bus) பெற்று, திருக்கழுக்குன்றமடைந்து காட்சி பல காணுதற்கும் காரணமாக இருந்தது.

அப் பெரியாரவர்களின் பேரு தவி அகம் விட்டகலாதவை களில் ஒன்ருகும்.

அனுதினமும் தவருது வந்து அண்ணலின் அருட்சோறுண்டு ஆகாய வழியே ஆனந்தத்தோடு பறந்து செல்லும் கழுகின் செய லைக் காலந்தவறியதால் காண முடியவில்லையென்ருலும், ஆங் குள்ள சிற்பக்கலைகள் எங்கள் சிந்தைக்கு எவ்வளவோ ஆறு தலையும், அமைதியையும் அளித் தன.

முதலாம் நரசிம்ம பல்லவன் காலத்து நன்கு குடையப்பட்ட கோவிலொன்றும், குடைவு முடிவுபெருத கோவில்கள் சில வும் காணப்படுகின்றன. துவார பாலகர் இருவரின் தோற்றங் களைச் சங்கு போன்ற வளைவு முறையில் சைத்திரிகன் செதுக்கி யுள்ளது பாராட்டதக்கதொன் ருகும். மலையடிவாரத்திலுள்ள பக்தவத்ஸலர் கோவிலும், திருக் கோவிலின் வட பிராகாரத்து ஆதித்த சோழனல் அமைக்கப் பெற்ற சிறு கோவிலும், அழ குறச் செதுக்கப்பட்டுள்ள கல் வெட்டுக்களும் நம்மைக் கவர் கின்றன. மேலும் அழகிய கற் சிலைகளும், அம்மன் கோவி லொன்றும் ஆறுமுகக்கடவுளின் ஆலயமொன்றும் உள்ளன.

பின்னர்கழுக்குன்றம் விட்டுக் காரும்நகர்ந்தது. மாலை இரண்டு மணி சுமாருக்கு மஹாபலிபுரம் வந்து சேர்ந்தோம். அங்குள்ள சைனரின் சிலையும், சாத்வீக புத்தரின் சாந்த உருவமும், எங் களுள்ளத்திற்கு இதோபதேசக் காந்தியாரின் எழிலுருவை நினை வூட்டியன. இராசசிம்மனை பல்லவ மன்னனல் கட்டப் பெற்ற கடற்கரைக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் சோமாஸ் கந்தரும் பள்ளிகொண்டானின் நல்லிடமும், ஆங்கே கிடக்கும் ஆதிகாலத்துப் பீரங்கி யொன் றும், அனைவரது கவனத்தையும் ஈர்க்குந்தன்மையுடையன.

மேற்குப் புறத்திலுள்ள திரு மூர்த்தியின் திருக்கோவிலும், கிணறு போன்ற பள்ளமும், அதனருகே கிடக்கும் பேருருக் கல்லும் காணுவதற்குரிய காட் சிகளாம். முதன் முதலில் கோவில்களைக் குடையும் முறை யும் இங்கே தான் ஏற்பட் டது. இங்கே, சிம்ம உருவ மொன்றும், சிற்பங்கள் பலவும், இன்றும் நற்பொருளாகவே இருக்கின்றன. அபராஜித பல் லவன் காலத்தில் சைவத் திருக் கோவிலொன்றை வைணவத் திருக்கோவிலாக வடிவு மாறச் செய்ததும் இங்கே தான். துர்க் கைக் கோவிலொன்றில் தோன்

றும் சிற்ப முறையும், விநாயகர் கோவிலொன்றில் தோன்றும் கோபுர சிற்பங்களும் இராச சிம்மனது காலத்தில் செதுக்கப் பட்டனவாகத் தெரிகின்றன. அவற்றின் அழகும் பெருமை யும் அளவிடற்கரியனவாம்.

மலையின் மீது இவைகளைக் கண்டு மலைப்புற்றுக் கீழே இறங்கினோம். அங்கு ஆண் குரங்கிற்குப் பெண் குரங் கொன்று பேன் எடுப்பது போன்று செதுக்கியுள்ள சிலை யழகைக் கண்டு சிலையானோம்.

மேலும் ஆகாய கங்கை ஆறுகக் கீழ்நோக்கிவர, அதைக் கடுந்தவ முனிவ ரொருவர் குடித்து, பின்பு பகீரதனின் வேண்டுகோளுக்குப் பரிந்து முனிவர் காதின்வழியே விடும் வரலாற்றையுணர்த்தும் சித்தி ரங்கள் அனைத்தும் சிந்தையைக் கவர்வனவாம். அடுத்துள்ள கிருட்டின மண்டபமும், அதில் செதுக்கப்பட்டுள்ள பசு வொன்று தன்கன்றுக்குப் பா லூட்டும் காட்சியும் இயற்கை யின் எழிலை எடுத்துக் காட்டு வனவாம். சிற்றுணவிற்குப் பிறகு கடற்கரைக் கோவிலைக் காணச்சென்றோம். இராசசிம் மன் என்ற இரண்டாம் நர சிம்மவர்மனுல் கட்டப்பட்ட இக் கோவிலின் சிலபாகங்கள் அலை களால் தாக்கப்பட்டு அழிவுற் றுள்ளன. மிகுந்த பாகங்களை அலைகள் அழிக்கா மலிருக்க அவைகளைச்சுற்றி, 'காங்கிரீட்' மதில்கள் எழுப்பப்பட்டுள்ளன. அலைகளின் வேகத்தைத் தடுக்க பெருங்கல்லொன்றும் நிறுத்தப் பட்டுள்ளது. இதற்கு அருகா மையில் கப்பல் வழிதவறுமைக் குக் கலங்கரை விளக்கம் ஒன்றும் காணப்படுகிறது. திரும்பிவரும் வழியில் ஒருகோவிலில் நரசிம் மனது நல்லுருவமும், அவனது தந்தையாகிய மகேந்திரவர்ம னது உருவமும் அவர்களுடைய தேவிகளின் உருவங்களோடு காணப்படுகின்றன. அங்குக் கோயில்கொண்டுள்ள ஆதிவரா கப் பெருமாளைக் கண்டு ஆனந் தித்து, சங்கர நாராயணனைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு திரும்பி வரும்வழியில் சிங்கப் பெருமாளின் திருத்தலத்தையும் சிந்தை குளிர வந்தித்து நேரே சென்னை திரும்பலுற்ருேம்.

மறுநாள் ஏழாந்தேதி மயிலாப் பூரிலிருந்து, மகளிர் தேசிய உயர்நிலைப் பள்ளியார் உதவிய ஊர்தியின் மூலம், தேசியப் போராட்டத் திருமகளும், வேதாந்த விற்பன்னையும் சுய ஆட்சிஇயக்கம் (Home rule move -ment) போராட்டத்தலைவி)

MAHABALIPURAM

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



The Rathas of the Seven Pagodas



The Rathas of the Seven Pagodas

யுமான "அன்னி பெஸன்ட்" அம்மையாரின் சிலை அழைத் தெதிர்நிற்க, 'செனட்' மாளி கைக்கப்பால் பல்கலைக் கழகத் தைப் பார்த்துக் கொண்டே ஆகாயத்தைத் தடவி ஆனந்தத் தோடு அசைந்தாடும் தேசியக் கொடிக்குத் திருவணக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் செயிண்ட்ஜார்ஜ் கோட்டை அதனைச் சுற்றியுள்ள ஆழமான அகழிகள், ஆங்கே கிடக்கும் அதிசயப் பீரங்கிகள் முதலிய வற்றைக் கண்டு, நேரே சென்னைத் துறைமுக வாயிலைச் சேர்ந்தோம்.

துறைமுக வாயிலின்கண் தோற்றமளிக்கும் பாரந் தூக்கி களைப்பார்த்தோம். பின்பு, அர சியலாரின் மணிக் கொடி அணி செய "ஜலதுர்க்கா" "ஜல கோபால்' என்ற இரு கப்பல்க ளும் எங்கள் வருகைக்காக எதிர் நோக்கிநிற்பன போல் நின்று கொண்டிருந்தன. ஜலகோபால் நங்கூரம் பாய்ச்சபட்டு நகராது நின்ற காட்சி, கப்பலில் முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரை உள்ள பிரிவினைக் காட்சி, மாலுமிகள் வதியும் மாற்றிடம், பிரமிக்கத்தக்க பெருஞ் சங்கலி கள், உயிர் பிழைக்க உதவும் படகு தோல் (Life-Boat belt) ஆயனவற்றைக் கண்ணுற்ற பிறகு, கலங்கரை விளக் கத்தைக் காணக்கடுகி, உயர் நீதி மன்றவாயிலைக்குறுகினோம்.

உயர் மன்ற நீதிபதிகளில் முதல் இந்தியரான சர். டி. முத்துசாமி ஐயரவர்களின் பளிங்குருவம் எங்களை முன் னின்று வரவேற்க, உயர் மன்ற நீதிபதிகளாகிய பதஞ்சலி சாஸ்திரியவர்களின் பட அழ கையும், வரதாச்சாரியாரவர் களின் வடிவழகையும், நானி லமே புகழும் நாவன்மை படைத்த நல்ல வழக்கறிஞரான 'நார்ட்டன்' எனும் ஆங்கிலேய ரின் அணி நிழற் படத்தையும் கண்டு களித்து, முழுமைச் சட்டமன்றம், சாதாரண நீதி பதிகளின் சார்பிடம், பிரதம நீதிபதிகளின் பேரிடம், மற் றைய விசாரணை மன்றங்கள் முதலியன கண்டு ஆனந்தவிக டன் என்னும் அரிய வார இத ழின் அலுவலகத்திற்கப்பால், அமெரிக்கச் செய்தியுணர் அலு வல் நிலையம் தாண்டி, அகில இந்தியப் புகழ் சகல கலாநிலைய மென்னும் ஜெமினி ஸ்டுடியோ விற்கு வந்து சேர்ந்தோம்.

ஒலிப்பதிவுமுறை, ஒலிப்பதிவு நிலை, அழகு செய்யும் அணி மாடம், இயற்கையின் காட்

சியை எழிலுற விளக்கும் இனிய ஓவிய நிலையங்கள் சினிமாவிற்கு வேண்டிய செயற்கைச் சாமான்கள், வனக்காட்சிக்கு வேண்டிய வகையான மான் கூட்டங்கள் ஆகிய இவைகளைக் கண்டார், இந்திரலோகமோ எனச் சந்தேகியாது விடார்.

இடைவேளை உணவிற்குப் பிறகு கண்காட்சிச் சாலையை நோக்கி எங்கள் கார் பறந்தது. ஆங்கே தானிய தாவரவகைகள் அடுத்தடுத்த அறைகளில் அழகாக வைக்கப்பட்டுள்ளன. அஃதன்றியும் உயிரற்ற உடற்கூடுகளின் வரிசைகளையும், பண்டைச் சிற்பங்களையும் பார்த்து மிருகக்காட்சிச்சாலை மேவலுற்றோம்.

இரண்டு சிங்கங்கள், புலி வகைகள், ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, நீர் நாய், பறக்கும் அணில், பழகிய யானை, ஆஸ்திரேலியக் கங்காரு, பள்ளத்திற் கிடக்கும் பெரும் முதலைகள், ஆகிய அதிசய உயிர்களைக் கண்டோம். மேலும் பலவகை வண்ணக் கிளிகளையும், சில வகை வண்ண மயில்களையும், அற்புத வியப்பளிக்கும் ஆஸ்திரேலியக் கிளியையுங் கண்டு களித்தோம். பிறகு உலகப்புகழின் திலகமான ஆங்கில "இந்து" தினசரி இதழின் அலுவலகம் வந்துற்றோம். இந்து நிலையத்தில் அடுக்கு வரிசையிலுள்ள பல அச்சியந்திரங்களையும், அவற்றினிடையே உழைத்துவரும் 500க்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கண்டார் ஆச்சரியத்திற் குள்ளாகாமல் இருக்க முடியாது. செய்தி அச்சடிப்பது ஒன்று, விளம்பரத்தையச்சடிப்பது பிறிதொன்று, இவற்றையடுக்கிவைப்பது மற்றொன்று, இங்ஙனமாகச் செய்கின்ற இயந்திரங்களின் செயல்கள் வியப்பிற்குரியனவே. இவ்வித இயந்திரங்களின் உதவியினால் மணிக்கு 60000 பிரதிகளை அச்சடித்து அகில முழுவதற்கும் அனுப்புகின்றனர், மற்றும் "Sport and Pastime" என உடனலப் பயிற்சிக்கென்று உருவாகியுள்ள வார இதழின் செயலகத்தையும் கண்ணுற்றோம். பின்னர் கடற்கரைக் காற்றால் உடல் நலம் பேணி மயிலாப்பூர் மகளிர் பள்ளி மருவி இராவுணவு அருந்தி நேரே எழும்பூர் நிலையம் எய்திச் சீரழிந்த செஞ்சிமாநகர்காண, திண்டிவனம் புறப்பட்டோம். செஞ்சியாற்றங் கரையிலே சீரழிந்து கிடந்த செஞ்சிக் கோட்டையைக் கண்டோம். செஞ்சிக்கோட்டை என்றதும் செலுத்தவேண்டிய

கப்பம் தர மறுத்துச் செருக்களத்தில் உயிரிழந்த சிங்கம் தேசிங்கு மன்னனின் தீர வரலாறு நம் நினைவிற்குவர நேரமாகாது.

முக்கோணமாக அமைந்த மூன்று குன்றுகளைப் பிணைத்து வலிய கருங்கற்சுவர்களால் வளைத்துக் கட்டப்பட்டுள்ளது இக்கோட்டை. இராஜகிரிக் கோட்டையையடைய வேண்டுமாயின் மதிற்சுவர்களால் மருவப்பெற்று, அகன்ற அகழிகளால் அரண் செய்யப்பட்ட உட்கோட்டையின் மூலமாகத்தான் உள்ளே போகமுடியும். உட்கோட்டையின் சுவர்களின் வழியே உயரச் செல்வதற்கு ஏற்பப் படிகள் அமைந்துள்ளன. உயரச் சென்று உற்று நோக்கின் இராஜகிரியின் தென்பாகத்தின் சமநிலத்தையடையலாம். புளிய மரங்களும், புதர்களும் நிறைந்து போக்குவரவு இல்லாத இவ்விடத்தில் இரண்டு திருக்கோயில்கள் காணப்படுகின்றன. அதிலொன்று கமலக் கண்ணியின் கோவிலாகும். அதன் எதிரில் அழிநிலையிலுள்ள இழிகுளமொன்றும் காணப்படுகிறது. குளமும், கொடிய புதர்களும், பாழ்மண்டபங்களும், சுனையும், அவ்விடம் செல்வார்க்கு அச்சந்தரும் நிலையிலுள்ளன.

இராஜகிரியின் வழி செங்குத்தாகவுள்ளது. உட்கோட்டையின் வாயிலின் மூலமாய்ச் செல்லும் இவ்வழி உன்னத பாகத்திற்குச் சமஉயரத்திலுள்ள ஒருபாறையில் முடிவடைகிறது. இப்பாறைக்கும், இராஜகிரியின் உச்சிக்குமிடையேயுள்ள மரப்பாலமென்றைக் கடந்து உச்சிக்கோட்டையின் வாயிலைக் குறுகினல் இராஜகிரியின் சிகரத்தை எய்தலாம். வெடிமருந்துக் கிடங்கொன்றும் பெருந் தானியக் களஞ்சியமிரண்டும், இன்றைய மணிக்கூண்டு போன்று எழிலுற விளங்கும் கொடித்தம்பம் இருந்த இடமுமே இராஜகிரிக் கோட்டையின் இன்றைய இன்பக் கனவுகளாம். இறும்பூது விளைக்கும்பெரும் பீரங்கியொன்றையும் என்றும்வற்றுருதுபாறையினிடையில் பருகியவர்க்கின்பந் தரும் இனிய சுனையையும் கண்டால் வியக்காதிருக்க முடியாது.

செஞ்சிக் கோட்டையிலுள்ள களஞ்சியங்களில் அடிவாரத்திலுள்ளவையே யாவற்றினும் பெரியனவாம். அடுத்து எட்டு அடுக்குகளைத் தன்னகத்தே

கொண்டு விளங்குகிறது. 'கல்யாண மஹால்!'. அதன் தோற்றத்தைக் கொண்டே அது அரசியின் மாளிகை என்பதை யறியலாம். சக்கரக் குளத்திற்கும் செட்டிக்குளத் திற்கும் இடையிலுள்ள அநுமார்சிலை அச்சந்தரும் நிலையில் அவ்வளவு பெரிதாக வுள்ளது. இதன் வடகரையில் தான் தேசிங்கு மன்னனின் மனைவி தீப்பாய்ந்ததாகச் சொல்லுகிறார்கள்.

மாட்சிமையுள்ள மலைவளத்தினையும், செந்தமிழர் தலைநகரான சென்னை நகர்ச்சிறப்பினையும், கண்டு மீண்டநாங்கள் திண்டிவனம் திரும்பி, புகைவண்டியில் மறுநாள் ஒன்பதாம் தேதி பூதலூர் மீண்டு உலகம் உருண்டை யென்பதை உறுதிப் படுத்துகிறவர்களைப் போல, புறப்பட்ட புண்ணிய தலமாகிய காட்டுப்பள்ளியுளான் கழலிணைக்கே வந்து சேர்ந்தோம்.

இன்னபிற காட்சிகளைக் காண்பதற்கும், கண்டகாட்சிகளின் வரலாற்றுண்மைகளைத் தக்க சான்றுகளுடன் விளக்குதற்கும், எங்களுடன் இருந்து இன்மொழி கூறிவந்த நம் பள்ளியின் நடுநாயகத் தலைவர் அவர்களை நாம் என்றும் மறக்கமுடியாது.



செஞ்சிக்கோட்டையும், ராஜகிரியின் தோற்றமும்.

MAHABALIPURAM

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

The Rathas of the Seven Pagodas



Rock-cut Cave Temple 7th Century A. D.

மாமல்லபுரமும், கங்காவதரணமும்.

மாமல்லபுரம் என்பது, பல்லவர்களின் துறைமுகப்பட்டினம். இது அவர்களுடைய தலைநகரமான காஞ்சிமா நகரிலிருந்து 45 மைல் தூரத்திலுள்ளது. மாமல்லன் என்பது, கி. பி. 630 லிருந்து 655 வரை ஆண்ட பல்லவ அரசரான முதலாம் நரசிம்மவர்மனின் விருதுகளில் ஒன்று.

இவ்வூர், பூதத்தாழ்வாரின் பிறப்பிடம் என்று கூறப்பட்டுள்ளது. அவருடைய இரண்டாம் திருவந்தாதியின் 70-ஆம் பாடலில், **'மாமல்லை'** என்ற பெயர் காணப்படுகின்றது.

'தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை தமருள்ளும்
'மாமல்லை' கோவல் மதிட்குடந்தையென்பரே
ஏவல்ல எந்தைக்கிடம்' என்பது காண்க.

இனி, திருக்குருகைப் பிரான் பூதத்தாழ்வாரைப்பற்றி எழுதிய பாடலில் **'கடல் மல்லை பூதத்தார்'** என்று ஆழ்வாரையும் அவருடைய ஊரையும் ஒருங்கே சிறப்பித்துள்ளார்.

ஆனால் பூதத்தாழ்வார், ஆதி ஆழ்வார்களில் ஒருவர் என்று கூறலாமே ஒழிய, அவருடைய காலத்தை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. எட்டாம் நூற்றாண்டில் ஆண்ட பல்லவ இரண்டாம் நந்திவர்மருடைய காலத்து வாழ்ந்த திருமங்கையாழ்வார் **'கடல் மல்லையின்'** வாணிப வளத்தைப் பற்றிப் பாடியுள்ளார். அது வருமாறு:-

"புலங்கொள் நிதிக்குவையொடு
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும்
சுமந்து எங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும் மல்லைக்
கடல் மல்லைத் தல சயனம்
வலங்கொள்மனத் தாரவரை
வலங்கொள்என் மடநெஞ்சே"

பையனூர் என்ற ஊர்க் கல்வெட்டொன்றில்தான் (கி. பி. எட்டாவது நூற்றாண்டு) **'மாமல்லபுரம்'** என்ற பெயர் நமக்குக் கிடைத்துள்ளது. விஜய நந்தி விக்கிரமன் என்ற பல்லவ அரசன் காலத்தில் மாமல்லபுரத்தில் வசித்து வந்த ஓர் வியாபாரி ஆண்டுதோறும் ஏரிக்குத் தூர் எடுக்க ஒரு தர்மம் செய்தான் — இவ்வொரு கல்வெட்டில் தான் **'மாமல்லபுரம்'** என்ற பெயர் காணப்படுகிறது.

ஆகவே, இவ்வூர் **'கடல்மல்லை'**, **'மாமல்லை'**, **மாமல்லபுரம்** என்ற பல பெயர்களையுடையது. மகாபலியின் கதையை விளக்கும்

சிற்பம் இவ்வூரில் நிறுவப்பெற்றுள்ளதால் சிலர் இதை 'மகாபலிபுரம்' என்றும் அழைப்பதுண்டு. ஆங்கிலேயர்கள் ஏழு கோயில்கள் (The Seven Pagodas) என்றே இவ்வூரை யழைத்தனர்.

மாமல்லபுரத்திலுள்ள பல அரிய சிற்பங்களில் ஒன்று 'கங்காவதரணச்சிற்பம். இதைத் தொல்கலை யாராய்ச்சியாளர்கள் 'அர்ச்சுனன் தவம்' என்றே இன்றும் வழங்குகின்றனர்.

ஆனால் இது பகீரதன் தபஸைக் குறிக்குமென்றும் கங்கை பூமிக்கு இழிதலைக் குறிக்குமென்றும் முதன் முதல் ஒரு பிரஞ்சு ஆசிரியர் எழுதினர்.

அர்ச்சுனன் பாசுபதம் பெறச் செய்த தவமும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொணரச் செய்த தவமும் பின்கண்டுள்ள கதைகளிலிருந்து வெளிப்படும்.

1. அர்ச்சுனன் தவம் (கதை)

தர்ம புத்திரரால் தூண்டப்பட்ட அர்ச்சுனன் பரமசிவனின் அனுக்கிரஹம்பெற்ற பாசு பதாஸ்திரத்தைப் பெறுவதற்காகப் பனி மலையில் கடும் தவம் செய்தான்.

முதல் மாதம் கனி கிழங்குகளைப் புசித்து தவம் செய்தான். இரண்டாவது மாதம் தண்ணீர் மட்டும் அருந்தித்தவம் செய்தான். மூன்ருவது மாதத்தில் ஆகாரமே யில்லாமல் தவஞ் செய்தான். நான்காவது மாதத்தில் இரு கைகளையும் தூக்கிக் கொண்டு சூரியனை உற்று நோக்கியபடியே கடும் தவம் புரிந்தான்–ஐந்தாவது மாதம் துரியோதனனுல் ஏவப்பெற்ற ஓர் அசுரன் பன்றி வடிவங் கொண்டு பயங்கரமான தோற்றத்துடன் அர்ச்சுனன் தவஞ் செய்யுமிடத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தான். வில், கத்தி, அம்பு, இவைகளைத்தரித்த ஓர் வேடன், வேடஸ்திரீகள் புடை சூழ, அப்பன்றியைத் துரத்தி வந்தான். அதற்குள் அர்ச்சுனன் தன் பாணத்தினுல் அப்பன்றியைத் தாக்கினுன்.

அதே சமயத்து வேடனும் குறி தவருது தாக்கினுன். இருவராலும் தாக்குண்ட அப்பன்றி அவ்விடத்தே மாண்டது.

அப்போது அவ்வேடன் அர்ச்சுனனை நோக்கி "என்னுல் குறி வைக்கப்பட்ட இப்பன்றியை நீ தாக்கியது தவறு. ஆகையால் நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள். இல்லையேல் யுத்தத்திற்குத் தயாராக இரு" என்ருன்.

உடனே இருவர்க்கும் சண்டை மூண்டது. வேடன் பாணங்களை மழை போற் சொரிவது கண்டு ஆவேச முற்ற அர்ச்சுனன் அப்பாணங்களை எதிர்த்தடித்தான். ஆனல் அக்கிராதன் தன் மகிமையினுல் அர்ச்சுனனுடைய பாணங்களை வீணுகும் படி அடித்து விட்டான். அர்ச்சுனனுடைய அக்ஷயமான அம்புப்புட்டிலும் வில்லும்



மாமல்லபுரத்தில் "கங்கை அவதரணம்"

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955

மாயமாய் மறைந்தன. இவற்ருல் கோபமுற்ற அர்ச்சுனன் அந்தக் கிராதனேடு மல் யுத்தம் புரிந்தான். முடிவில் கிராதன் அர்ச்சுனனை உருட்டிவிட அவனும் மலையடிவாரத்தே உணர்வற்றுக் கிடந்தான். சற்று நேரத்தில் உணர்வு பெற்ற அர்ச்சுனன் கண் விழித்துப் பார்த்த போது விருஷபாரூடராய்ச் சிவபெருமான் பார்வதியோடு காட்சியளித்தார். அர்ச்சுனன் சிவபெருமானின் பாதங்களில் வீழ்ந்து தன்னை மன்னிக்கு மாறு வேண்டினன்.

மகேசுவரன் மகிழ்ச்சியோடு, "உன் விருப்பத்தைச் சொல்வாயாக", என்ருன்.—பிறகு அர்ச்சுனனுடைய வேண்டுகோளுக் கிணங்கி, பரமேசுவரன் தடையற்றதும், எல்லா அஸ்திரங்களையும் தடைசெய்யக் கூடியதும், பகைவர்களை யழிக்கக் கூடியதும் தேவர்கள், தானவர்கள் இவர்களாலும் தாங்க முடியாத அற்புத சக்தியுடையதுமாகிய பாசுபதாஸ்திரம் என்ற திவ்யாஸ்திரத்தையருளினர். உடனே பகவான் மறைந்தான்.

இனி பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவரச் செய்த தவத்தையும் பார்ப்போம்.

2. கங்காவதரணம் (கதை)

ஸகர மஹாராஜன் மரணமடைந்தவுடன் ஜனங்கள் அம்சுமானை அரசனுகத் தேர்ந்தெடுத்தனர். அம்சுமான் வெகுகாலம் ராஜ்யத்தை யாண்டுவிட்டுத் தன் புதல்வனை திலீபனிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு இமய மலையின் சிகரத்தில் கடுந்தவம் புரிந்தான்.

திலீபன் தன்னுடைய முன்னேர்களைக் கரையேற்ற வழியொன்றுந் தோன்ருதவனுகவே மரணமடைந்தான். அத்திலீபனின் புதல்வனை பகீரதன் ராஜ்ஜியத்தை மந்திரிகளிடம் ஒப்படைத்து விட்டுக் கங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டுவர ஸங்கல்பித்துக் கொண்டு 'கோகர்ண' க்ஷேத்திரத்தில் நீண்டதொரு கடுந்தவம் புரிந்தான். அதாவது கைகளைத் தூக்கிக் கொண்டும், பஞ்சாக்னியின் மத்தியில் தவம் செய்தும், மாதத்திற்கொருமுறை உணவருந்தியும் இந்திரியங்களை அடக்கியும் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தவம்செய்தான். இதைக்கண்டு மகிழ்ந்த பிர்மா பகீரதனைப் பார்த்து, "பகீரத! உன் தவத்தினல் திருப்தியடைந்திருக்கிறேன். ஆகையால் உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக" என்ருர். அதற்குப் பகீரதன் "ஹே பிர்மதேவரே! என்னுடைய தவம் பயனுள்ளதாகுமானல் ஸகரனுடைய குமாரர்கள் யாவரும் என்னிடமிருந்து தர்ப்பண தீர்த்தத்தை அடைவார்களாக. மேலும் என்னுடைய முன்னேர்களின் அஸ்தியானது கரைக்கப்பட்டு அவர்கள் ஸ்வர்க்க லோகத்தை அடைவார்களாக. இக்ஷ்வாகு வம்சத்திற்குத் தங்

களுடைய பரிபூரண அனுக்ரஹம் ஏற்படவேண்டும்." என்று கேட்டான். இதைக்கேட்ட பிரம்மதேவன் "உன்னுடைய ஸங்கல்பம் மிகவும் பெரியதாக இருக்கிறது. உனக்கு எல்லா க்ஷேமங்களும் உண்டாகுக. மேலும் கங்கையைத் தாங்கும் சக்தியுடையவர் பரமசிவன் ஒருவரே. ஆகையால் அவரைக் குறித்து நீ தவம் செய்வாயாக" என்றார்.

அவ்வாறே பகீரதனும் ஒரு வருஷம் கட்டைவிரலின் நுனியால் நின்றுகொண்டே பரமசிவனைக் குறித்துத் தவம் செய்தான்.

ஒரு வருஷம் முடிந்தது. பரமேசுவரனும் அவன் முன்பு தோன்றி, "பகீரதா! உன்னுடைய தவத்தினால் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். நான் கங்கையைச் சிரஸால் தாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

பிறகு கங்கை மிகுந்த கர்வத்துடனும், கடும்வேகத்துடனும், ஆகாயத்திலிருந்து பரமசுத்தமான பரமசிவனுடைய தலையில் குதித்தாள். அவளுடைய செருக்கையடக்க நினைத்த பரமேசுவரர் தம்முடைய ஜடையில் கங்கையை மறைத்து விட்டார். அந்த ஜடையிலிருந்து வெளியே வர வழிதெரியாமல் கங்காதேவி திகைத்தாள். பிறகு பகீரதன் வருத்தமடைந்து கங்கையை வெளிக்கொண்டு வர மீண்டும் தவம் புரிய, பரமேசுவரரும் கங்கையை வெளியே விட்டார்.

அப்பொழுது "பிந்துசரஸ்" என்னுமிடத்தை நோக்கிச் சென்ற கங்கை (1) ஹ்லாதினி (2) பவானி (3) நளினி என்ற மூன்று உருவாகப் பிரிந்து கிழ் நோக்கிச் சென்றனள். அவளே (1) ஸுசக்ஷு (2) ஸீதா (3) ஸிந்து என்ற மூன்று உருவாகப் பிரிந்து மேற்கு நோக்கிச் சென்றனள். கங்கை என்ற ஏழாவது நதியானது பகீரதனை அனுசரித்துச் சென்றது.

தேவர்கள் யாவரும் கங்கையைக் கண்டு களித்தனர்.

ஆகாயத்திலிருந்து கங்கை பூமியை நோக்கி வரும் போது அதில் மீன், ஆமை, முதலைபோன்ற நீர்வாழும் பிராணிகள் தென்பட்டன.

பகீரதன் ரதத்திலேறிக் கொண்டு முன்னே செல்லக் கங்கை அவன் பின் சென்றாள். அப்பொழுது, தேவர்களும், ரிஷிகளும், அசுரர்களும், கிந்நரர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும் நாகர்களும், அப்ஸரஸ்களும் கங்கையைப் பின் தொடர்ந்து வந்துகொண்டு இருந்தனர். மேலும் தேவர்கள் நகரம் போன்ற விசாலமான விமானங்களில் இருந்துகொண்டு குதிரைகள், யானைகள் சூழக் கங்காவதரணத்தைப் பார்க்க அங்கே ஒன்று கூடி நின்றார்கள். பின்னர்க் கங்கை



Ardhanari

The Sculptures in the niches of the Rathas

ஜன்ஹு மஹரிஷியின் யாக சாலையை யழித்து விட்டாள்.

அதனால் கோபம்கொண்ட அம் முனிவர் கங்கையை ஆசமனம் செய்துவிட்டார். பிறகு தேவர் களின் வேண்டுகோளுக்கிணங்கி, கங்கையைக் காது வழியாக விட் டார். அன்று முதல் கங்கை ஜன்ஹு முனிவரின் புதல்வி **"ஜான்ஹவி"** என்று அழைக்கப் பட்டாள்.

பிறகு பகீரதன் கங்கையைப் பாதாள லோகத்திற்கு அழைத்துச் சென்று தன்னுடைய முன்னோர் களின் அஸ்தியைக் கங்கையால் பரிசுத்தப் படுத்தினன். பிறகு பிரம்மா பிரத்யக்ஷமாகி ஸகர புத்திரர்கள் உத்தமலோகமடைந்த நற்செய்தியையும் தெரிவித்து விட்டு மறைந்தார். தேவர்கள் பகீரதனைப் புகழ்ந்தனர். புக ழேற்ற பகீரதனும் வெகுகாலம் தன்னுடைய ராஜ்ஜியத்தையாண் டான்.

இனி நமது சிற்பத்தைக் கவனிப் போம். தவம் செய்யும் ஒருவன் நிற் கின்றான். சிவபெருமானையும் காண் கின்றோம். ஆனல் பன்றியைக் காணவில்லை. அருச்சுனனின் தவம் என்று கொண்டாலோ, நடுவில் இருக்கும் நீர்வீழ்ச்சிக்கு இட மில்லை. ஆதலால் இவ்வரிய சிற்பத் தைப் பகீரதனின் தவமாகக் கொள்ளுதலே பொருத்தமாகும்.

சிற்பக்குன்றின் மேலே நீர்த்தேக் கம் – நடுவே கங்கை இழிதலாகிய நீர் வீழ்ச்சி – இதைக்குறிக்க நாகர் கள், நாக கன்னிகைகள் – மேல் பாகத்தில் பகீரதன் கடுந்தவம் புரிந்து பரமசிவனின் அனுக்கிரகம் பெறுதல்–கீழ்ப்பாகத்தில் ஜன்ஹு மகரிஷியின் தவம் – ஆகிய இவை யனைத்தும் ஒருங்கே அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் தேவர்கள். மனிதர்கள், மிருகஜாதி கள் யாவரும் அளவற்ற மகிழ்ச்சி யோடு காணப்படுகின்றனர். சிலர் கங்கையில் நீராடுகிறார்கள். இரு பக்கங்களிலுமுள்ள சிற்பங்கள் யாவும் மத்திமபாகத்தே அமைந் துள்ள கங்கையையே நோக்கி நிற் கின்றன. சிலர் குடங்களில் கங்கை நீரைச்சுமந்து செல்கின்றனர்.

எனவே இவ்விரு கதைகளையும் ஊன்றிப் பார்த்தால், இச்சிற் பத்தை உருவாக்கிய சிற்பியின் உட்கருத்து, பகீரதனின் கடுந்தவத் தாலும் பெருமுயற்சியாலும் பூமிக் குக் கொண்டுவரப்பட்ட கங்கை யின் சரிதத்தையே குறிக்கும் என் பது தெளிவாகும்.

The Autobiography of an One Anna Coin

[R. Narayanaswamy VI-B]

I was born in the Calcutta Mint in 1911, the year when His Majesty King George V was crowned at Delhi. I came out of the mint shining bright as silver. On the obverse was seen the head of George V and on the reverse was stamped my denomination. Immediately after my christening I was sent to Madras along with other coins. An officer of the Government of Madras received us at the Central Station and we were soon lodged in the Treasury at the fort.

After a year's stay in the well-guarded but ill-ventilated vaults of the Currency Office, I managed to see the light of day; and soon I was in the hands of a shroff of the Imperial Bank. He took me over to his office. The same day he passed me along with several other coins across the counter to a fire-wood merchant in exchange for a worn-out five-rupee note. Attracted by my glitter and freshness, the merchant locked me up in his cash box and would not easily part with me! Some days later, the merchant's young son who chanced to notice me, was so struck with my beauty and brilliance that he begged his father to part with me. The merchant could not say no to his son. I became the boy's possession. He loved me and valued me most. To my great delight he showed me to every one of his playmates. I was happy for some time.

Meanwhile, the World War had broken out and newer and more brilliant rivals entered the field. Moreover, the merchant's son gave me as a present to a cooly woman. To my infinite disgust I found myself rusticating in the foul-smelling pouch of the dirty woman. I was almost suffocated by the tobacco stench inside; and I jostled with bits

of stale tobacco, broken pieces of nut, dry betel leaves and a few defaced coppers. The noose of the pouch was so tightly drawn around its mouth that there was no ghost of a chance for my escape. At last Providence came to my rescue. The cooly woman happened to drop the pouch while carrying a load. It was picked up by a ragged dirty little boy who rushed me to a seller of paper kites.

I had lost my glitter. I was begrimed with dirt. The kite-seller received me indifferently and gave the boy a kite. From the kite-seller I passed on to a hotel-keeper for a cup of muddy liquid called coffee! The hotel-keeper struck me so forcibly on the counter to test my genuineness that it almost took my breath away!

Thereafter, I was in brisk circulation. I knew no rest. An office clerk, a bus-conductor, a vegetable vendor and a newspaper boy handled me in turn. In short, the daily wear and tear took my life out. I became very thin and pale. In this deplorable condition I passed on to the hands of a pupil who had just left the school after writing the S. S. L. C. Public Examination. He was eager to know if he had lost any weight! So he took me to the weighing machine at the Railway Station and dropped me in the slot. Out came the card with his weight and fortune. I was insttumental for the prediction that he would come out sucessful in the examination!

But still I lie imprisoned inside the weighing machine. I look forward to the day when I may be taken out along with my brother-coins. I know not whose slave I will be next or if I would go into the melting pot.

A possible solution to our food problem

[G. Anandavalli VI-C]

" Grow more food ", " Miss a meal a week ", these are the slogans we often hear from many a press and platform. Our President, Our Prime Minister and all leaders who take great interest in the affairs of the country echo the slogans. But these words may prove to be a lullaby to put the problem to sleep, if we do not work hard with goodwill and sincerity.

Independent India has many problems to face with a view to maintaining her self-respect. The problem of food stands foremost. Its solution is made more difficult by the illiteracy and religious sentiments of the people. Out of her total income of about 360 crores of rupees, India is spending nearly 140 crores on food every year and yet, this problem remains as acute as ever.

Perhaps, by the substitution of other foodstuffs in the place of rice, we can surely solve this big problem. Custom, of course, has almost forced man to accept the articles of food quantitatively as well as qualitatively. We need, for our daily use, a big dose of carbohydrates. We consume large quantities of foodstuffs containing starch. Rice, wheat and other cereals form the stable item of our diet. Rice can be, and must be, in view of the alarming scarcity of food substituted by other articles of food containing starch. In Malabar people use a large quantity of tapioca as an important item of their food. In Europe and in America, people consume large quantities of potatoes as a substitute for wheat. So, why can't we use tapioca in the place of rice?

Tapioca has one great advantage over other cereals. Like many tubers, it is a heavy-yielding crop. Under very good conditions the production of



The President, the Hon'ble Mr. Justice P. N. Ramaswami, Mr. Hilton Brown and other guests; Founder's Day Celebration-7th February, 1954.

CONNEMARA PUBLIC LIBRARY 10 DEC 1955

any cereal does not normally exceed $\frac{3}{4}$ of a ton per acre. Even in Travancore and Cochin with very primitive methods of cultivation, eight to ten tons of Tapioca are grown per acre. In Malaya the production in an acre is 17 tons

while in Brazil the production is from 30 to 50 tons per acre. So if the cultivation of Tapioca in our land is improved and if people gradually take to it, the knotty problem of food can easily be solved.

Tapioca has certain other advantages. It can be cultivated during all the seasons of the year, provided there is enough water for its germination. It does not, like rice, require a large quantity of water. Because of this nature of the plant it can be cultivated in places where there are 50 inches of rainfall. For manure seeds and labour, the agriculturists need not spend more on Tapioca than on the cereals.

In Malabar large tracts of land are now lying waste. These should be brought under cultivation and the production of food crops must be increased by the improved methods of cultivation. The central and state Governments must bring thest plots immediately under cultivation In the same way many varieties of peas can also be cultivated in our country.

Substitution can thus be a practical way of solving our food problem. But habit plays an important part in food. So much education and propaganda will be required before substitution becomes popular and effective.

மெய்யுரை

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ —நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த வுரையாமோ தெளி.

வடவேங்கடம் தென்குமரி எல்லை கொண்டு அமிழ் தெனும்படி வழங்கி வரும் மொழி தமிழ். இதைக் கம்பன் தன் காவியத்தில் "என்று முள தென் தமிழ்" என்றும் "விரிசடைக் கடவுள் தந்த தமிழ்" என்றும் கூறுவான். அழியாப் புகழ் படைத்த விம்மொழிக்கு ஏற்றந் தந்து நிற்பது தெய்வப் புலவரால் வையம் உய்யும் பொருட்டு அருளப் பெற்ற குறள். திருமால் தமது ஈரடியால் மூவுலகளந்தார். வள்ளுவப் பெருமானே ஒன்றே முக்காலடியால் எல்லாவற்றையும் அளந்து வான்புகழ் கொண்டார். அளவிற் சிறியதாய் ஆற்றலிற் பெரியதாய் இந்நூற்கு உரை கண்டவர் பலர். அவர்களில் சிறந்தார் பத்துப் பேர். அன்னருள் ஒன்பதின்மர் வானத்து விளங்கும் விண்மீன்களாக, அவற்றிடையே தவழ்ந்து செல்லும் தண்மதியமாகத் திகழ்கின்றார் ***(பரிமேலழகர்)*** இவர். காஞ்சீபுரத்தவர் என்றும் சுமார் 800 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர் என்றும் ஸ்ரீமான் மு. இராகவையங்கார் கூறுவர். இவர் தென் சொற்கடந்து வட சொற்கடற்கு எல்லை தேர்ந்தவர். ஆழ்ந்த இலக்கண அறிவு படைத்தவர்; நுண்மாண நுழைபுலம் பெற்றவர்; திருக்குறள் என்னும் பேராற்றை எதிர்த்து அதன் ஆழம், அகலம், முதலியவற்றைக் கற்றோர் வியக்க மற்றோர் வாழ்த்தத் தெள்ளிய தமிழிலே தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அழகு பொருந்த வெகு இனிமையாக விளக்கியவர். நூலாசிரியர் கருத்தை நுணுகி ஆராய்ந்து, தாம் கூறுவதை நயம்பட இலக்கிய மேற்கோளுடன் இலக்கண வரம்பிற்குட்பட்டுக் கூறுபவர்; பொருந்தாத பிறவுரைகளைக் காரணங் கூறிக் கண்ணியமாக மறுப்பவர்; பிறவுரைகளில் ஏற்றங் காணின் போற்றத் தயங்காதவர். இத்தன்மைகள் பலவும் பெற்ற இவர் உரையில் காணும் சிறப்புக்கள் பல. அதிகார முறை வைப்பு, குறள்களின் அமைப்பு இவற்றிற்கு இவர் கூறும் விளக்கம் வேறெவரும் விளக்காத தொன்று. நூல் வல்ல புலவோரால் பாராட்டப்படும் இவர் உரையாலும் வள்ளுவர் நூலுக்கு ஏற்றம் வந்ததென்று கூறுவது மிகையாகாது. நவீன உரைகள் வெளிவரும் இந்நாளில் இன்னாரின் உரை விசேடங்களில் ஒன்றிரண்டு கூறுவன்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

— என்ற குறள்

தீவினையச்சம் என்னும். அதிகாரத்தில் அமைந்துள்ளது. இதற்கு உரை வகுக்கப் புகுமுன் தமது நுண்ணறிவென்னும் சாணை கொண்டு ஒவ்வொரு சொல்லையும் துருவிப் பார்த்துச் சில வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடை கூறும் வகையில் உரை யெழுதுகிறார். தீயவை என்றால் என்ன? ஒருவன் ஏன் தீயவை செய்கிறான்? என்ன நினைத்துத் தீயவை செய்கிறான்? நினைத்த பயன் பெறுகின்றானா? உண்மையில் அவன் பெறும் பயன்தான் என்ன? தீயவைகட்கு ஏன் அஞ்ச வேண்டும்? எதைப் போல் அஞ்ச வேண்டும்? இவ்வளவு வினாக்களுக்கும் பரிமேலழகர் உரையில் தான் விடை உண்டு. பாருங்கள்:

"தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃது ஒழிந்து துன்பமேபயத்தலால் அத்தன்மைய வாகிய தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும்'' என்று பொழிப்புரை எழுதினார். பின்னும் சில வினாக்கள் அவரை விட்ட பாடில்லை. தீ—தீவினை இவைகட்கு உள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன? என்ற வினாக்கள் அவர் உள்ளத்தில் தோன்றின. தீயோ தன்னைத் தீண்டியனைத் தீண்டிய விடத்தில் தானே சுடுகின்றது. ஆனால் தீவினையோ தன்னைத் தீண்டியவனைத் தீண்டிய காலத்தன்றிப் பிறிதொரு காலத்தும், தீண்டிய தேயத்தில் மட்டுமன்றிப் பிறிதொரு தேயத்தும், தீண்டிய உடம்பையே அன்றிப் பிறவுடம்புகளிலும் வருத்துகின்றது என்பதை ஆகம அளவைகளோடு அனுபவ வாயிலாகவும் அறிகின்றார். ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங் குடியிற் பிறந்த கோவலன், முற்பிறப்பில் சங்கமன் என்னும் வாணிகனைக் கொல்லுவித்த காரணத்தால் மறு பிறப்பில் பொற்கொல்லனால் வீண்பழி சுமத்தப் பட்டுப் பாண்டியனால் கொல்லப் படவில்லையா? தயரதன், தண்ணீர் மொண்டு வரச் சென்ற முனிகுமரனை சுரோசனனை அறியாது அம்பெய்து கொன்ற தீவினையால் தனது உயிரை ஒத்த தனயனை தாசரதியைப் பிரிந்து துயருழந்து தவித்துமாய வில்லையா? என்பன போன்றவை அவர் நினைவுக்கு வருகின்றன. மேலும் விசேடவுரை எழுதுகின்றார். "பிறிதொரு காலத்தும், பிறிதொரு தேயத்தும் பிறிதோருடம்பினும் சென்று சுடுதல் தீக்கின்மையின் தீயினும் அஞ்சப் படுவதாயிற்று'' என வேற்றுமை நயந் தோன்ற விளக்குகின்றார். இவ்வுரை குறள் போலவே அதற்கு ஏற்றந் தந்து குறுகிய அளவில் காணப்படுகிறது. இதன் மாண்பை உன்னுங்கள்.

ஆறுகட்கு இருமருங்கும் கரையிருப்பன போல் இலக்கியங்கட்கும் இலக்கணங்கள் உள. கரையில வேல் ஆறு அழகிழந்து பாழாய்ப்

போகும். இலக்கண வரம்பின்றேல் மொழியும் பொலிவழியும். இவ் வியல்பிற்குரிய இலக்கணத்தால் குற ளின் பெருமையைக் குன்றிவிட்ட விளக்காக்கியமை காண்பாம். உம்மை பெருத சொல் ***செவ்வெண்*** எனப்படும். அதுயாண்டும் தொகை பெற்றே வரும். அச் செவ்வெண் வரும் வாக்கியங்கட்குப் பொருள் கொள்ளுங்கால் பிரித்தும் பொருள் கொள்ளலாம். உதாரணமாகச் சாத்தன் கோவிந்தன் ஆகியவர் வேலை செய்தனர் என்றவிடத்துச் சாத்தன் தனியே வேலை செய்தான், கோவிந்தன் தனியே வேலை செய் தான்; சாத்தன் கோவிந்தன் இருவ ரும் வேலை செய்தனர் என மூவகை யாலும் பொருள் கொள்ளலாம். உம்மை மறைந்து ஒரு சொல் தன் மைத்தாய்ப் பிரிதலின்றித் தொகுதி யாய்ப் பொருள் கொள்வது ***உம்மைத்தொகை.*** கபில பரணர் வந்தார் என்பதும் அது. கபிலரும் பரணரும் என்றதிலுள்ள உம்மை கள் மறைந்து வந்துள்ளன. கபில ரும் பரணரும் சேர்ந்து வந்தார்கள் என்பதே இதன் பொருள். தனித் தனியே கபிலரும் பரணரும் வந்தா ரெனின் கபிலன் பரணன் இவர்கள் வந்தனர் என்றே கூற வேண்டும். செய்யுளில் ஒவ்வோரிடங்களில் செவ்வெண்ணின் தொகை மறைந்து வருவதும் உண்டு. அப்பொழுது கபிலன் பரணன் வந்தார் என்றே கூற வேண்டும். இதனல் செவ் வெண்ணின் உட் சொற்கள் பிரித் துப் பொருள் கொள்ளப் படும் என்றும், உம்மைத் தொகையின் உட் சொற்கள் பிரித்துப் பொருள் கொள்ளப் படாவென்றும் அறியப் படுகிறன. பிறனுக்குப் பொருளாந் தன்மை யுடையாளைக் காதலித்து ஒழுகுகின்ற அறியாமை உலகத்தின் கண் அற நூலையும் பொருள் நூலை யும் ஆராய்ந்து அறிந்தார்மாட்டு இல்லை என்பது இதன் பொருள்.

பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். என்பது குறள்.

இக் குறட்பாவிற்குத் தாம் எழு திய விசேடவுரையில் "செவ்வெண் ணின் தொகை தொக்கு நின்றது" என இலக்கண விசேடமும் எழுதிப் போந்தார். இங்ஙனங் கூருது உம் மைத் தொகை என்று எழுதியிருப் பின் குறளின் அழகே குறைந்திருக் கும். உம்மைத் தொகையிலக்கணப் படி அறநூலையும் பொருள் நூலையும் சேர்த்து ஆராய்ந்தார் மாட்டு அப் பேதைமை இல்லை என்றதனுன் அறநூலை மட்டும் ஆராய்ந்தாரிட மும் அத்திய ஒழுக்கம் காணப்படும்; பொருள்நூலை மட்டும் ஆராய்ந்தா ரிடமும் அத்திய வொழுக்கம் காணப் படும் என்று பொருள் கொள்ளப்பட்டு, "பிறர்மனை நோக் காத பேராண்மை சான்ருேர்க்கு அறன் ஒன்ருே ஆன்ற ஒழுக்கு" என்ற வள்ளுவர் கூற்றிற்கே மாறு

பட்டு வழு வேற்படுகிறது. இதைப் பரிகரித்து, அறநூலுணர்ந்தார் மாட்டும் அப்பேதைமை இல்லை. பொருள் நூலுணர்ந்தார் மாட்டும் அப் பேதைமை இல்லை; அறநூலையும் பொருணூலையும் சேர்த்து ஆராய்ந் தார் மாட்டும் அப் பேதைமை இல்லை என்று பொருள் கொள்வான்வேண் டிச் செவ்வெண்ணின் தொகை தொக்கு நின்றது என்று எழுதியதன் சிறப்பு உள்ளுந்தோறும் நூல் வல்லார்க்குப் புதியதோர் உவகை அளிக்கும்.

இறுதியாகப் பொருந்தாத பிற வுரையை எங்ஙனம் மறுக்கின்றார் என்பதைக் கவனிப்போம். அறத் துப் பாலில் துறவறவியலில் 'நிலை யாமை' என்று ஒரு அதிகாரம் அமைந்துள்ளது. அதன் பொருள் உலகில் காணப்படும் பொருள்கள் யாவும் அழியக் கூடியவை என்பது. பொருள்களின் உண்மைத் தன்மை யையும் அவற்றது அழிவையும் உணர்ந்து ஞானம் கைவரப் பெற்ற பொழுதே, விடாது தொடர்ந்து வருகின்ற அகப்பற்று புறப்பற்று இவைகளைக் களைந்து, எல்லாப் பொருளையும் பற்றி நின்றே, தாமரை இலையில் பட்ட தண்ணீர் போன்று பற்றற்ற பரமனிடம் பக்திகொண்டு வீடு எய்தல் ஒருவர்க்குக் கூடும். ஆதலின் அதன் தன்மையைப் பலர் பலவாறு விளக்கிப் போந்தனர். கண்ணனும் கீதையில் "மனிதன் எவ்வாறு நைந்து போன துணிகளை எறிந்து விட்டு வேறான புதிய துணி களை உடுத்துக் கொள்கிறானோ அவ் வாறே உடலில் உறைபவனும் நைந்து போன சரீரங்களை விட்டு விட்டுப் புதிய சரீரங்களை அடைகி றான்' என்றான். இராம கிருஷ்ண பரம ஹம்ஸரும் ""பாம்பும் அதன் சட்டை யும் வெவ்வேறானவை. அதுபோல ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறா னவை" என்றார். வள்ளுவரும் இந் நிலையாமையைச் செல்வ நிலையாமை யென்றும் யாக்கை நிலையாமை என்றும் பிரித்துக் கொண்டு யாக்கை யின் அழியுந் தன்மையையும் அத னுள்ளுறையும் ஆத்மாவின் தன்மை யையும் விளக்குவான் தொடங்கினார்.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு. என்பது குறள்.

குறள் உரையாசிரியர் பதின்மரில் குறிப்பிடத் தக்க ஒருவரான மணக் குடவர் "கூடு தனியே கிடக்கப் பறவை பறந்து போனாற் போன்றது உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு" என்று எழுதினார். இவர் உரைப்படி, "குடம்பை" என்பதற் குக் கூடு என்று பொருள் செய்யப் பட்டிருக்கிறது. பரிமேலழகர் இதைப் பலமுறை சிந்தித்துப் பார்த்தார். கூட்டை உடம்பிற்கு உவமை கொண்டது பொருத்த மாகப் படவில்லை. கூடு பறவை யோடு பிறக்கவில்லை. ஆனால் உயிர் உடம்போடு பிறக்கிறது. பறந்து சென்ற பறவை மறுபடியும் தன்

கூட்டிற்கு வந்து சேருகிறது. ஆனால் ஒரு உடம்பை விட்டுச் சென்ற உயிர் மறுபடியும் அந்த உடம்பிற்கு மீள்வதில்லை. ஆகிய இக்காரணங்களைக் கொண்டு குடம்பை என்பதற்கு மாற்றுரை காண முற்பட்டுப் பன்னூல்பயின்ற செந் நெறிச் செல்வரான பரிமேலழகர் 'குடம்பை' என்பதற்கு 'முட்டை' என்று பொருள் கண்டு குறளின் பெருமையைக் காப்பாற்றினர். பாருங்கள் அவர் எழுதும் உரையின் அருமை பெருமைகளை.

"முன் தனியாத முட்டை தனித்துக் கிடக்கப் புள்ளு (பறவை) பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து உடம்பிற்கும் உயிருக்கும் உளதாய தொடர்பு" என்பது. எவ்வளவு அழகாக உள்ளது கொண்டு பொருள் விரித்திருக்கின்றார்? தாம் உரைத்த உரையையும் விளக்கும் பெற்றிதான் என்னே! கவனியுங்கள். "தனித் தொழிய என்றதனான் முன் தனியாமை பெற்றாம். அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந் துணையும் அதற்காதாரமாய் நிற்றல், அதனான் அஃது அதற்குவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமல் போதலின் புள் உவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பலவுளவேனும் புள்ளையே கூறினார் பறந்து போதல் தொழிலொப்புமையான். நட்பு என்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதலுணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் வினை வயத்தால் கூடியல்லது நட்பில வென்றறிக." இவ்வாறு விசேடவுரையும் எழுதியிருக்கும் திறம் உண்மையிலேயே போற்றற் பாலதன்றோ! எவ்வளவு அரிய பெரிய கருத்துக்கள்! எளிய இனிய நடை இன்னும் இவை போல அழகனது உரைக்கடலில் காணற்பால நன்முத்தங்கள் பற்பல. அவை பயில் தொறும் இன்பம் பயப்பன. அப் பேறு யாவர்க்கும் கிட்டுவதாகுக.

நாவலனார் தாமுரைத்த நன்னூற் குறைகண்டார்
மேவுசீர் மேலோர் மிகப்பலரால் —தாமவருள்
உத்தமச் சீர்த்தி உரைகண்ட அழகனென்
வித்தகர்க்கு நேரார் விளம்பு.

உள்ள உளமினிக்கும் ஊக்கியே சொற்றக்கால்
தள்ளரிய இன்பம் தழைக்குமே—ஒள்ளிழாய்
எள்ளரிய தொல்புகழான் ஏற்றபரி மேலழகன்
உள்ளி உரைத்த உரை.

[S.D.]

ஐ. நா. ஸ்தாபனம்

[கோ. இராமன்]

முன்னுரை :-

மனித சமூகம் வாழ்வதற்குப் போட்டியிட முற்பட்டதிலிருந்தே சண்டைகளும் தொடர்ந்து ஆரம்பித்து விட்டன. மனிதன் எவ்வளவு தூரம் விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்கின்றானோ, அவ்வளவு தூரம் அவைகளைக்கொண்டே தன்னை அழித்துக் கொள்வதிலும் முன்னேறியுள்ளான் என்பதைக் கடந்த யுத்தங்கள் தெரிவித்துவிட்டன. 'இரண்டு மகாயுத்தங்களில் ஏற்பட்ட உயிர்ச்சேதத்தையும், பொருள் சேதத்தையும் எண்ணிப் பார்ப்போமானால், இன்னும் இம் மாதிரி இரண்டு யுத்தங்கள் ஏற்பட்டால் மனிதப்பூண்டே அடியோடு அழிந்துவிடும்' என்ற நிலைமைக்கு வந்து விட்டது இன்றைய உலகம். மனிதனுடைய நாகரிகம் முன்னேற்றம் அடைய, அடைய, அவனுடைய மனப்பான்மை பின்னேற்றமடைந்து யுத்த வெறியில் கொண்டு போய் விடுகிறது. ஒரு நாட்டு மக்கள் மற்றவரைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது; தாங்கள் மட்டும்தான் உலகில் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக்கொண்டு மற்றவர்களின் மனித உரிமையைப் பறிப்பது போன்ற செயல்கள் தான் உலகத்தில் அடிக்கடிச் சண்டைகள் ஏற்படக்காரணமாக இருப்பவை. இப்படிப் பட்ட மனிதனுடைய இழிவான செயல்களைக் குழிதோண்டிப் புதைப்பதற்காகத் தோன்றியதுதான் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம். இரண்டாம் உலக யுத்தத்தில் மாண்ட ஐந்தரைக் கோடி வீரர்களின் சடலத்தால் எழுந்த சமாதான ஸ்தம்பம் யுத்தத்தில் நிர்க்கதியாக விடப் பட்ட ஆயிரமாயிரம் அநாதைகளின் பெருமூச்சால் தோன்றிய புகை மண்டலம்.

தோற்றமும் அமைப்பும்

இடி விழுந்த மரம்போல் தோன்றிய இவ்வுலகைப் பார்த்து ஏளனச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு இருந்தது யுத்தம் என்னும் பேய். அப்பேயின் பிடியிலிருந்து விடுத்துக் கொண்ட ஐம்பது நாட்டுப் பிரதிநிதிகள் அமர்ந்து திட்டம் தீட்டினர் 1945-ஆம் வருடம்

ஜூன் மாதம் 'ஸான்பிரான் ஸிஸ்கோ' நகரில். அத்திட்டத்தின் உருவே 1946-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதி 'நியுயார்க்' நகரில் தோன்றிய ஐக்கியநாட்டு ஸ்தாபனம்.

ஐ. நா. விலுள்ள 'அசெம்பிளி' என்னும் பொதுமகா சபையில், அங்கம் வகிக்கும் அத்தனை நாடுகளுக்கும் பிரதிநிதித்துவம் உண்டு. அப்பிரதிநிதிகளுக்கு உலகில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறுவதற்கு உரிமையுண்டு. அதற்கான பரிகாரங்களைக் கூறவும் அவர்கள் அருகதையுடையவர்கள். இச்சபை பொருளாதார விஷயங்கள், சமூகநிலை, கலைத்துறைகள், அரசியல் ஆகிய துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பிற்கு ஏற்றவாறு யோசனை கூறும்.

பதினோறு நாடுகள் அங்கம் வகிக்கும் 'பந்தோபஸ்து சபை' என்று ஒன்று இருக்கிறது. சண்டைகள் ஏற்படாமல் தடுத்து உலகை யுத்தத்திலிருந்து மீட்பதே இச்சபையின் நோக்கமாகும். ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது பலாத்கார ஆக்ரமிப்பில் இறங்குமானல் அதைத்தடுத்து நிறுத்துவதற்குச் சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். இதில் அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ், ரஷ்யா, சீனு ஆகிய ஐந்து வல்லரசுகளும் நீடித்து அங்கம் வகிக்கும். எஞ்சியுள்ள ஆறுஸ்தானத்திற்கும், இரண்டு வருடத்திற்கொருமுறை அசெம்பிளியினல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு நாடுகள் அங்கம் வகிக்கும்.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் அடுத்த அங்கம் தர்மகர்த்தா சபை. இச்சபை தர்மகர்த்தா ஆதினத்திலுள்ள பிரதேசங்களின் அரசியல், பொருளாதாரம், சமூகக்கலை ஸ்தாபனங்களை அபிவிருத்திசெய்து அப்பிரதேசங்களை முன்னேற்றத்திற்குக்கொண்டு வருவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசங்களில் நேரிடையாகச்சென்று பார்வை யிடுவதற்கு இதன் அங்கத்தினர்களுக்கு உரிமையுண்டு.

ஐ. நா. வின் கடைசி அங்கமாகத்திகழ்வது பொருளாதார சபை. இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள நாடுளின் சமூககம் பொருளாதாரம் இவைகளை அபிவிருத்தி செய்வது; உலகில் யுத்தம் ஏற்படாமல் செய்து, அமைதியை நிலைநாட்டுவது

OUR ART GALLERY

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Left to Right
1. VISHNU (*Modern*) 2. CHANDISWARA 3. SURYA. 4. BRAHMA. 2, 3 & 4 belongs to 9th century A. D. [2 to 4 from Niyamam]



Image of a Devi in **Tribunga** pose (with three bends) 9th century A. D. found in a ruined temple near Nemam (Niyamam)

ஆகிய இவைகளே இதன் முக்கிய குறிக்கோளாகும். இச் சபையின் மற்ெறாரு பிரிவான 'மனித உரிமைஸ்தாபனம்' உலகிலுள்ள மாந்தர் யாவரும் சமமானவர் என்றும் சமஉரிமைகள் கொண்டவர்கள் என்றும் போதிக்கிறது. மற்றும் ஐ. நா.வுக்கெனப் பலம் பொருந்திய முப்படை இராணுவம் ஒன்றும் அமைந்திருக்கிறது. ஒரு சர்வதேச நீதிமன்றமும் இதில் இடம் பெற்றிருக்கிறது.

பணி :-

உலகில் ஏற்படவிருந்த அனேக யுத்தங்களை ஐ. நா. தடுத்திருக்கிறது. முக்கியமாகத் தென் கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் ஏற்பட்டிருந்த பயங்கரமான யுத்தத்தை மிகவும் சிரமத்துடன் நிறுத்தி, ஒரு நிலையான சமாதானத்தையும் எதிர்நோக்கியிருக்கிறது. காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், ஏற்படவிருந்த போரைத்தடுத்தது. மொராக்கோ மக்களுக்குச் சுதந்திரமளிக்கும் பிரச்னையையும், ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் பிரச்னையையும், தன்னுடைய நிகழ்ச்சி நிரலில் முக்கியமான பிரச்னையாக விவாதித்துக் கொண்டிருக்கிறது. ஐ. நா.வின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் 'ஆயுதபரிகரணத் திட்டம்' என்ற திட்டத்தை அமல் நடத்தும் பொருட்டு முயற்சித்து வருகின்றனர். இவைகளுக் கெல்லாம் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றே நாம் நம்பலாம்.

இந்தியா :-

ஐ. நா. தோன்றுவதற்கு காரணமாயிருந்த ஐம்பது நாடுகளில் ஒன்று இந்தியா. இது அன்றுதொட்டு இன்றுவரை உலகம் வியக்கும்படிச் சமாதானப்பணி புரிகிறது. 1948-ஆம் வருடம் இந்தியப் பிரதிநிதி ஸ்ரீ ராமஸ்வாமி முதலியார், சமூக சபைக்குத் தலைமை தாங்கித் தொண்டு புரிந்தார். 1949ஆம் வருடம் பந்தோபஸ்து சபையில் இந்தியா ஒரு ஸ்தானம் பெற்றது. இன்று 1953-ஆம் வருடம் இந்திய மாதரசி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஐ. நா. தலைமைப் பீடத்தில் இந்தியாவின் சார்பாக வீற்றிருக்கிறார். உலகம் இந்தியாவுக்கு அளித்த இப்பதவியே இந்தியாவின் சமாதான சேவைக்குத் தக்க சான்றாகும். பெருமை வாய்ந்த நாட்டின் ஒப்பற்ற தலைவரின் தலைசிறந்த பிரதிநிதி என்று ஒரு பெரிய வல்லரசு புகழும்படி ஐ. நா. வில் அமர்ந்திருக்கிறார்.

இந்தியப்பிரதிநிதி ஸ்ரீ கிருஷ்ண மேனன்.

முடிவுரை :-

ஐ. நா. ஸ்தாபனத்தைத் தொடங்கி விட்டோம்; இனி இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர் நாடுகளின் விவகாரங்களையும், இத் தேசங்களுக்கு வழிகாட்டிச் செல்லும் வேலையையும் அது செய்து கொள்ளும். நமக்குக் கவலை இல்லை. இனி உலகில் சண்டைகள் வரமாட்டா, சமாதானம் தானாக வந்து விடும் என்று சும்மா இருப்பார்களேயானால் ஐ. நா.வே ஒரு கேலிக்கூத்தாக மாறிவிடும். ஐ. நா. சமாதானத்தின் பாதுகாவலனாக அமைய வேண்டுமானால் அதில் அங்கம் வகிக்கும் அத்தனை நாடுகளும் சமாதானத்தில் பற்றும், ஆர்வமும் உடையனவாக இருக்க வேண்டும், உலகிலேயே அதிக ஜனத்தொகையைக் கொண்ட கம்யூனிஸ்டு சீனாவைத் தம்முள் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளவேண்டும், காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதன் மூலம் அந்நாட்டு மக்களின் நன் மதிப்பைப்பெறவேண்டும்.

OUR ART GALLERY

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Another BRAHMA 9th century A. D.



MAHAVIRA the Jaina Tirthankara

[An idol found in the bank of a channel a mile from Tirukattupalli. The suffix **palli** indicates that it was once a **Jain** settlement. This is the only evidence of the prevalance in the past of Jainism in this area.]

திருக்காட்டுப்பள்ளி - - - - பருவநிலைக் குறிப்பு

[K. S.]

ஓரிடத்தின் தட்ப வெப்பநிலை அதன் சூழ் புற இயற்கையமைப்பு, அக்ஷாம்சம், சமுத்திர மட்டத்திலிருந்து அதன் உயரம் சமுத்திரக்கரையிலிருந்து அதன் தூரம் முதலானவைகளைப் பொறுத்திருக்கிறது. ஒரு பிரதேசத்தின் தட்ப வெப்பநிலையைத் தெரிந்து கொள்ள அப்பிரதேசத்தைச் சுற்றியிருக்கும் முக்கிய நிலையங்களில் வானநிலையைக் குறித்துக் கொண்டு அவைகளிலிருந்து பொது சீதோஷ்ண நிலையை அறிய வேண்டும்' வானிலைக்குறிப்புகளில் மிகவும் முக்கியமானவை வாயுமண்டலஅழுத்தம், வெப்பநிலை, வாயுவின் ஈரத்தரம், மழையளவு முதலியன, அநேக வருடங்களாகக் குறிக்கப்பட்டுள்ள மேற்கூறிய அளவுகளின் சராசரியிலிருந்து அப்பிரதேசத்தின் தட்ப வெப்ப நிலையை ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

திருக்காட்டுப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாவில் 11° வ. அக்ஷத்தில் ஒரு பரந்த சமவெளியில் அமைந்துள்ளது. சமுத்திரக் கரையிலிருந்து அதன் தூரம் சுமார் 60 மைல்; உயரம் சுமார் 70 அடி. ஸர். சிவசாமிஅய்யர் உயர்தரக் கல்லூரியில் வானிலைக் குறிப்புகள் குறிக்கத் தேவையான வசதிகளுள. சுமார் இருபது வருடகாலமாகக் குறிக்கப்பட்டுள்ள குறிப்புகளிருந்து அதன் தட்ப வெப்ப நிலையைப் பற்றிக் கொடுத்துள்ள படங்களிலிருந்து விஷயங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இங்கு வெப்பநிலை மிக அதிகமான மாதங்கள் ஏப்ரல், மே, ஜுன். குளிர் மாதங்கள் நவம்பர், டிசம்பர், ஜனவரி. கோடையில் கூடுதல் வெப்பநிலை 97°F. குளிர்காலத்தில் குறைந்த வெப்பநிலை 74°F. ஆதலால் வருட சராசரி உஷ்ண வியாப்தி 23°. வருட சராசரி வெப்பநிலை 84°F. கோடையில் பெறும்மழையளவு. 17, 61''. குளிர் காலத்தில் பெறும்மழையளவு 22.77''

இந்த ஊர் அக்டோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்ருல் அதிக மழை பெறும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இவ்விதமான தட்பவெப்பநிலை புல்வெளிக்குச் சாதகமானது. ஆதலால் தான் இப்பிரதேசத்தைச் சுற்றி நெல் வயல்களும் மூங்கில் தோப்புக்களும் கருவைமரங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவ்வித இயற்கைப் பிரதேசத்திற்கு உஷ்ணமண்டலப் புல்வெளிப் பிரதேசம் அல்லது 'ஸாவன்ளுப் பிரதேசம்' எனப்பெயர்.

திருக்காட்டுப்பள்ளி இரு அயனக் கோடுகளுக்கிடையே 11° வ. அக்ஷத்திலிருப்பதால் வருடத்தில் இருமுறை சூரியன் இங்கு தலைக்கு நேராக வரும். அத்தினங்கள் ஆகஸ்டு 10ம், மே மாதம் மூன்ரும் தேதியுமாகும். இவற்றுள் மே மாதத்தைக் கடும் கோடையென்கிறோம். ஆகஸ்டு மாதத்தைக் கோடையெனச் சொல்வதில்லை. ஏனெனில் அப்பருவத்தில் மேற்கிலுள்ள அரபிக்கடலிலிருந்து நீராவி நிரம்பியிருக்கும் தென்மேற்கு பருவக்காற்று வீசி வெப்பத்தைக் குறைக்கிறது.

திருக்காட்டுப்பள்ளியில் வருட சராசரி வளி மண்டல அமுக்கம் 29.8'' கடந்த 23 வருடங்களுள் இங்கு உண்டான மிகக் குறைந்த வளி மண்டல அமுக்கம் 29.33''. அன்று இடி மழையோடு கூடிய புயல் காற்று வீசிற்று.

இவ்வூரின் வளி மண்டல அமுக்கம், வெப்பநிலை, மழையளவு இவைகளைக் காட்டும் குறிப்புகள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.



CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1956
MADRAS



From 1937 - to 1952

CONNEMARA PUBLIC L...
MADRAS
10 DEC 1955

TEMPERATURES



DRY & WET



Maximum & Minimum

சமுத்திர மட்டத்திலிருந்து உயரம்	வளிமண்டல அமுக்கம்
சமுத்திரமட்டம்	30″
910′	29″
1850′	28″
2820′	27″
3820′	26″
4850′	25″
5500′	24·28″
5910′	24″
6500′	23·33″
7010′	23″
8150′	22″
9330′	21″
10550′	20″
11000′	19·46″
12000′	18·72″
13170′	18″
14408′	17·04″
16000′	16″

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

[சர். சிவஸ்வாமி அய்யர்]

சிவஸ்வாமிபுரம் விவசாயப் பண்ணை

[வி. கிருபாசங்கரன்]

இந் நகரத்தே யுறையும் மாந்தர், பாலர்கள் அனைவரும் புண்ணியஞ் செய்தவர்கள். சிவஸ்வாமி ஐயரை மறக்க முடியாதென்பது வெள்ளிடைமலை. இந்நகரில் மாணவர்களின் கல்விக்கென ஒரு உயர்தரப் பள்ளியை நிறுவிய உத்தமர் அவர். உயர்நிலைப்பள்ளி ஒன்றில்லாது பாலைவனமாகக் கிடந்த இவ்விடத்தைச் சோலை வனமாக்கிய பெரும் பேறு அன்னாருக் குரியது. “கல்வியிலான் கண்ணிலான்” என்பதனைக்கருதி, கருத்துச் செலுத்தி உலகம் போற்றும் உயர்ந்த தொண்டினைச் செய்த அவர், இன்று நேரில் உயிரோடு இல்லையெனினும், அருவமாய் நம்மிடையே உலவுகிறாரென்பது யாவரும் மறக்க முடியாத உண்மை. மம்மர் அறுக்கும் மருந்தாகிய கல்வியின் பயனை உணர்ந்த கலைஞர், தம் ஆயுட்காலம் வரை ஈட்டிய தனத்தையெல்லாம், நமது கல்விக்கென ஒதுக்கிவைத்து, தொண்டாற்றியுள்ளார். அஃதன்றியும் பலர் பல்லூர்களிலிருந்தும் வந்து படித்து வல்லுநராக வேண்டுதல் குறித்து “கல்யாணி விடுதி” யும் அமைத்துப்போந்தார்.

இப்போது அந் நன்னெறியைக் கடைப்பிடித் தொழுகும் கலைஞரை நாம் கண்ணுல் பார்க்கிறேம். அவரே நம் பள்ளித் தலைவர் அண்ணல் சிவஸ்வாமிஐயரின் கொள்கைகளை மனதில் உன்னி, உன்னி, சிந்தனையைச் செலுத்தி, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற பொன்மொழிக்கு ஏற்ப கழனிகளை அமைத்தார். கரடு முரடாகக் கிடந்த இடங்களைச் சிந்தனைச் செல்வர் காவென ஆக்கினுர். அல்லும், பகலும் அனவரதமும் சென்று, உழைத்தார் இப்பெரியார். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற முதுமொழி முற்றிலும் உண்மையாகியது. கனவிலும், நினைவிலும் அண்ணல் சிவஸ்வாமி ஐயரின் கொள்கைகளை எண்ணும் இவர், அவ்விடத்திற்குச் 'சிவஸ்வாமிபுரம்' என்ற நாமத்தைச்சூட்டினுர்; கார் பெயச் செழிக்கும் கழனி கடுப்ப, ஏர் பெறு அவன் சொலை இனிதுள மடுக்கும் நன்மாணவன் போன்று அன்ஞரின் உள்ளக் கிடக்கைகளை உண்மையாக்கிய உத்தமரிவர். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று சங்கநாதம் செய்த பாரதியின் கனவை நினைவாக்கிய கலைஞர் இவர்.

வற்றிக்கிடந்த, வறண்டிருந்த இடத்தை வளமுளதாக்கி, நெல்லும் கரும்பும், நல்ல நவதானியமும் விளையச்செய்த வித்தகர் இவர். கதியின்றிக்கிடந்த இடத்தைத் தம் மதியிஞல் மதிக்கத்தக்க இடமாகச் செய்த மாணிக்கம் இவர். "சிவசாமிப் பண்ணையிலே சோறுமுண்டு மோருமுண்டு மோர்குடிக்க வசதியுண்டு சர்க்காரு வசதியுண்டு" என்ற இரு அடிகள் அவ்விடத்தின் பெருமையை விளக்கும்.

ஏட்டுக் கல்வியொடு அனுபவ அறிவும் உள்ள கல்வியே சிறந்ததெனக் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர். ("Education mingled with experience is, in fact, the best education in the world.") இப் பொன்னுரையைக் கருத்தில் கொண்டு, நம்மையும் ஏட்டுப் படிப்புவித்தகர்களாக்காமல், வீட்டுப் படிப்பிற்குதவும் விவசாயத்தையும் போதித்துள்ளார்.

என்னே ! இவர்தம் சீரிய உள்ளம்;
உள்ளத்தின் வெள்ளப்பெருக்கால் உருவாகிய
சிவஸ்வாமிபுரம் நீடூழி வாழ்க !
பாரெல்லாம் புகழுமிந்தப் பாரத நாடு தன்னில்
சீரெல்லாம் சிறந்து நல்லசீலமும் பெற்றுவாழும்
பாலமுதுடனே நல்ல பல்வகையமுதுமூட்டும்
பாலசுப்பிரமணியமே நீ பல்லாண்டு வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

திருக்காட்டுப்பள்ளி சர்சிவசாமிஐயர் ஐஸ்கூலேச்சார்ந்த
சிவசாமிபுரத்து விவசாயப்பண்ணை மாணவர் பாடிய

நாட்டுமெட்டுப் பாட்டுக்கள்

" இலம்என்று அசைஇ யிருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் " —திருக்குறள்.

1 மஞ்சுதவழ் சிவசாமிப் பண்ணைநிலம் பார்த்துவரும் மக்கள் எல்லாம்
வஞ்சமிலா நெஞ்சருக்குத் தாமரையாள் தருவளென்ற வார்த்தை மெய்யே
கொஞ்சநெஞ்ச மென்னுது பலன்பலவும் கொடுப்பளெனக் கூறக்கேட்டோம்
பஞ்சிபடும் பாடுபடு வார்தமக்கு வாழிசொல்லிப் பாடுவோமே.

---

2 சிவஸ்வாமிப் பண்ணையிலே—சேறும்உண்டு சோறும்உண்டு
விவசாயம் தானூஉம் உண்டு— (தங்கரெத்தினமே)
அதை—விவரமாகக் கேட்பாயடி— (பொன்னுரத்தனமே)

3 முப்பது ஏக்கர்வாங்கி—மூன்றில்ரெண்டு பங்கைவெட்டி
நன் செய்புன்செய் கண்டாரடி— (தங்)
அவர்—நாட்டுக்கு நாயக மாம் (பொன்)

4 நீரும்உண்டு நிழலும்உண்டு—நெல்லும்உண்டு புல்லும்உண்டு
ஊரும்உண்டு பேரும் உண்டு— (தங்)
அதில்—உழைப்பதற்கு நாமும் உண்டு— (பொன்)

5 நீர்குடிக்கக் குளமும்உண்டு—நெல்லடிக்கக் களமும்உண்டு
மோர்குடிக்க விடுதி யுண்டு— (போடுதில்லாலே)
அங்கு—மொண்டுகொட்ட கேணீ யுண்டு— (சாமிதில்லாலே)

6 களையெடுக்கத் தழைமிதிக்க—கரையுங்கட்ட தரையுழுவ
கரும்பொன் என்ற இரும்பூ கொண்ட— (போடு)
பல—கருவியுண்டு ஏரும் உண்டு— (சாமி)

7 கோழிப்பண்ணை முதலாகக் குடிசைத்தொ ழில்கள்வைத்து
ஏழு தொழில் என்றா சொல்ல— (தங்)
அவர்—எங்களுக்குக் கல்வி தந்தார்— (பொன்)

8 சாலையுண்டு சோலையுண்டு—சர்க்காரு வசதியுண்டு
ஆர்பால சுப்ர மண்யம்— (தங்)
அவர்—பார்வை யதிகம் உண்டு— (பொன்)

9 கல்வெட்டுக் கலைக்கடலின்—கரைகடந்த தீரருக்கு
மண்வெட்டுப் பெரித ல்லவே— (தங்)
அவர்க்கு மாணவரின் வாழ்த்தும் உண்டு— (பொன்)

ஆக்கியோன்.

மு. வடிவேற்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



Yogasana Exercise



Transplanting of paddy. The vocational Agricultural Course

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



ANDHRA & MADRAS

ஆந்திர ராஜ்யம்

நவீன இந்தியா சரித்திரத்தில் இரண்டுமாதங்கள் மிகவும் முக்கிய மாக விளங்குகின்றன. அவை ஆகஸ்டு மாதமும் அக்டோபர் மாத மும். ஆகஸ்டு 15-ஆம் தேதி பரத நாடு சுதந்திரம் அடைந்த தினம் அக்டோபர் மாதம் இச் சுதந்திரத்திற்கு முக்கிய கர்தாக்க ளாகஇருந்த அன்னி பெஸன்டு அம் மையாரும் காந்திமகானும் பிறந்த மாதம். இரண்டு பேரும் அடுத்த டுத்த நாட்களில் இப் பூமியில் உத யமானார்கள்.

1953 அக்டோபர் 1 ஆம் தேதி அன்றுதான் ஆந்திரர்களுடைய விருப்பத்திணங்கச் சென்னை இராஜ் யத்தின் ஒரு பாகமாயிருந்த ஆந்திர ஜில்லாக்கள் தனி இராஜ்யமாகப் பிரிக்கப்பட்டன.சுமார் 40 வருடங் களாக ஆந்திரர்கள் கண்டுகொண் டிருந்த கனவு அன்றுதான் நினைவா யிற்று. சுமார் 60000 சதுர மைல் பரப்பிலுள்ள இரண்டு கோடி ஆந் திர மக்கள் சென்னை இராஜ்யத்தி லிருந்து விடுதலை யடைந்து தனி இராஜ்யத்தை அடைந்தார்கள்.

சரித்திரம்:- 1907—08ல் மசூலி பட்டணத்தில் ஆந்திரர்களின் ஒரு மகா சபை கூடியது. இதற்கு நிஜாம் ஹைதராபாதைச் சேர்ந்த தெலுங்கு ஜனங்களும் அழைக்கப் பட்டிருந்தார்கள். கூட்டத்தின் முக்கியநோக்கம் தென்னிந்தியாவி லுள்ள எல்லாஆந்திரர்களையும் ஒரு சமுதாயத்தின் கீழ்க் கொணர்ந்து மதம் சமுதாயம் சம்பந்தமான சீர் திருத்தம் செய்ய வேண்டும் என் பது தான். இந்த இயக்கம் குண்டூ ரில் முதன்முதலாகக்கூடிய கூட்டத் தில் அரசியல் சம்பந்தமாக மாறி ஒரு தனி ஆந்திர தேசம் ஏற்பட வேண்டுமெனத் தீர்மானித்தது. இதில் பல இடையூறுகள் காணப் பட்டதால் 1913 ல் இந்தியாபூரா வையும் மொழிவாரியாகப் பிரித் துத் திருத்தி அமைக்கவேண்டு மென்று ஒரு பிரச்னைகிளம்பிற்று. இந்த மொழிவாரி மாகாண சுயாட் சிக்கு வழிகாட்டியாக இருந்தவர் ஹார்டிஞ்சு பிரபு. பிரிவினை செய்த வங்காளத்தை மீண்டும் இணைப்பதற்கு பதிலாக மொழி வாரியாக வங்காளம் பீஹார் என இரண்டாகப் பிரித்தார். அதை வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு 1916ல் ஆந்திரர்கள் ஒரு மகாநாடு கூடி தனித்தனி ஆந்திர ராஜ்யம் வேண்டுமென முறையிட்டு அதன் பலனாக 1918 ஜனவரியில் லோக மான்ய திலகரின் உதவியால் தனி ஆந்திர காங்கிரஸ் கமிட்டி நிறுவப் பட்டது. பிறகு 1926-ல் ஆந்திர ஸர்வ கலாசாலை ஸ்தாபிக்கப்பட் டது. 1947-ல் ஆகஸ்டு மாதம் இந்தியா சுதந்திரமடைந்த பிறகு ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் வல்லபாய் படேல், பட்டாபி சீத்தா ராமையா என்ற மூவர் அங்கிய தொரு தனி கமிட்டி ஆந்திர பிரி வினைக்காக ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் ஒரு ரிபோர்டு ஸமர்ப் பித்த பிறகு 1949-ல் மத்திய சர்க் கார் இந்த விஷயங்களை ஒரு பிரி வினைக் கமிட்டியிடம் ஒப்படைத்து 1950ல் ஜனவரி 26-ல் தனி ஆந்திர மாகாணம் ஏற்படலாமென்ற நம் பிக்கை ஏற்பட்டிருந்தபொழுது எதிர்பாராத சம்பவங்களால் அது நிறைவேறவில்லை. பிறகு பொட்டி ஸ்ரீராமுலுவின் உண்ணாவிரதமும் அவரது உயிர் தியாகமும் நிலை மையை முற்றச்செய்து அதன் பலனாக 1953 அக்டோபர் 1-ம் தேதி ஆந்திர மாகாணப்பிரிவினை முடிவுபெற்றது.

விசால ஆந்திரம். ஆந்திரா வின் எதிர்காலம் மிகவும் மேன்மை யாக இருக்கும் என்பதற்கு அறி குறிகள் உள. ஏனெனில் இத்தனி இராஜ்யத்தில் இயற்கை யன்னை மிகவும் சாதகமான சக்திகளையும் நிலைமைகளையும் அளித்திருக்கிறாள். இங்குள்ள நிலப்பரப்பை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். சமுத் திரக் கரையோரமாக யிருக்கும் டெல்டாபிரதேசங்களும் கொடை ஜில்லா பிரதேசங் களில் (இராயல்சீமா) பிரதேசங் களிலுள்ள பீடபூமியும் மேற்கு பாகங்களிலுள்ள மலைப் பிராந் தியங்களும் உள்ள மலைகளை யடுத்

துள்ள சமவெளிகள் மிகவும் செழுமையானவை. ஆந்திர தேசத்திலுள்ள நீர் நிலையங்கள் மூன்றுவகை பாசனத்திட்டங்களுக்கும் சாதகமானவை(Major Medium Minor)

கோதாவரி, கிருஷ்ணு நதிகளும் அவற்றின் உபநதிகளும் ஏராளமான நீரைச் சமவெளிக்கு எடுத்துக்கொண்டு வருகின்றன. இந் நதிகளிலுள்ள பண்டைக்கால அணைக் கட்டுகள் பத்து லக்ஷம் ஏகர் நஞ்சை நிலங்களுக்கு உபயோகப் படுகின்றன. இவற்றுள் ஏழு சதவீதம் நீர்தான் பாசனத்துக்கு உபயோக படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது பெரும்பாலும் நீரை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன. அணைக்கட்டுகள் பாசன வசதி அளிப்பதுமன்றி வெள்ளப் பெருக்கைத் தடுத்து அதனுல் ஏற்படும் சேதத்தைக் குறைக்கவும் செய்கின்றன. ராமபாதசாகர் அணைக்கட்டுபூர்த்தியானுல் கோதாவரியில் வெள்ளத்தால் ஏற்படும் சேதம் தடைப்படும் கிருஷ்ணு நதியில் நந்தி கொண்டாடத் திட்டத்தால் இன்னும் இரண்டு மில்லியன் ஏகர் பரப்புள்ள நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வர முடிவும்.

ஹைதராபாதின் கிழக்கு பாகத்துக்கு தெலிங்கானு பிரதேசம் எனப்பெயர். இரண்டு பெருநதிகள் அப் பிராந்தியம் வழியாக ஓடுகின்றன. ஆயினும் இப்பொழுது அது வறண்ட பிரதேசமாக இருக்கிறது அங்கு பாசன வசதியேற்படுத்தி அங்கிருக்கும் ஜனங்களுக்குத் தொழில் செய்வதற்குரிய சௌகரியங்கள் செய்து கொடுத்தால் அவர்கள் தீய செயலில் இறங்காமல் நல்ல வழிகளில் கவனத்தைச் செலுத்தி விசால ஆந்திரம் செழித்தோங்கும்படி செய்வார்களென்பதில் ஐயமில்லை. மலைகளிலிருந்து ஓடிவரும் மழை நீரை ஏரிகளில் தேக்கி அதையும் பாசனத்துக்கு உபயோகிக்கலாம் இம்முறையை ராயலசீமையிலும் விசாகபட்டணம், ஸ்ரீ காகுளம் பிராந்தியங்களிலும் கையாளலாம்.

ஆந்திர நாட்டில் முக்கிய பயிர்கள் நெல், புன்செய்த் தானியங்கள் நிலக்கடலை, கரும்பு, புகையிலை, முதலியன. இவைகளின் மகசூலை பன்மடங்கு அதிகரிக்கப் பல வசதிகள் இருக்கின்றன. இப்பொழுது பாசன வசதியுள்ள இடங்களில் ஏகருக்குச் சராசரி 1600 ராத்தல் நெல்லும் பாசன வசதியில்லாத இடங்களில் ஏகருக்கு 1200 ராத்தல் நெல்லும் பயிராகின்றன. ஜப்பானிய முறையைக் கையாண்டு மகசூலை அதிரிக்க வசதிகள் உள.

நெல்லைப் போலவே மக்காச் சோளம் போன்ற புன்செய்ப் பயிர்களையும் பருத்தியையும் அதிகரிக்கலாம். துங்கபத்ரா அணைத் திட்டம் இதற்கு நல்ல வசதியளிக்கும் இதுவரை இங்கு குட்டையிழைப் பருத்தி பயிரிடப் பட்டுவந்தது. இனி நெட்டையிழைப் பருத்தி பயி

ரிடப் போதிய வசதி யேற்பட்டுள்ளது இதுபோல குண்டூரிலும் கோதாவரியிலும் பயிராகும் புகையிலையின் மகசூல் பன்மடங்கு அதிகரிக்கும்.

இதைத் தவிர ஆந்திராவில் தாதுப்பொருள்களும் ஏராளமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அங்கிருக்கும் ஆட்கள் வசதி, மின்சார வசதி, ஜல வசதி இவைகளைச் சரிவர உபயோகித்தால் பொருளாதார விஷயத்தில் ஆந்திர ராஜ்யம் வருங்காலத்தில் முன்னேற்றமடைந்து இந்திய யூனியனின் ஒரு பலமான தூணாக விளங்கலாம்.

ஜல மின்சார திட்டங்கள்:- இப்பொழுது விசாகபட்டணம், விஜயவாடா, நெல்லூர் இம்மூன்று பட்டணங்களிலும் மின்சார நிலயங்களுள. (Thermal steam stations.) இவற்றை ஜல மின் சக்தி திட்டங்களுடன் இணைக்க வசதியுள்ளன.

'மச்குண்டு' திட்டம் ஆந்திர ஒரிஸா எல்லையில் உள்ளது. மச்குண்டு என்பது கோதாவரியின் ஒரு உபநதி. அதில் துதுமா என்ற இடத்தில் (Duduma) உள்ள ஒரு நீர் வீழ்ச்சி 850 அடி உயரமுடையது. அதன் கூடுதல் மின் உற்பத்தித்திறன் 10200 K.W இது பூர்த்தியானல் அச் சக்தி ஸ்ரீகாகுளம், விசாகபட்டணம், மேற்கு கிழக்கு கோதாவரி, கிருஷ்ணை குண்டூர் ஜில்லாக்களுக்கு உபயோகப்படும். செலவு 14.55 கோடி ரூபாயாகும். இத்திட்டம் பூர்த்தியாக 10 வருடமாகும்.

துங்கபத்ரா மின் திட்டத்தில் இரண்டு நிலயங்களிருக்கின்றன. ஒன்று 'ஹொஸ்பேட்டை'யில் (Hospet) அணைக்கட்டுக்கருகிலும் மற்றது அங்கிருந்து பாசனக்கால் வாயில் 15 மைல் தூரத்திலும் இருக்கின்றன. இச்சக்தி கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களுக்கு அதிகப் பயனளிக்கும். இதற்குச் செலவு சுமார் 8 கோடி ரூபாயாகுமெனக் கருதப்படுகிறது.

ராமபாதசாகர் திட்டம். இதன் இரு பிரிவுகளின் நீளம் 6600 அடி உயரம் அஸ்திவாரத்திலிருந்து 428 அடி. இது பாசனத்துக்கும் மின்சாரத்துக்கும் உதவும். இதனல் 2.75 மில்லியன் ஏகர் நஞ்செய் நிலத்துக்குப்பாசன வசதிஏற்படும். மேலும் கோதாவரி கிருஷ்ணை டெல்டாக்களில் இப்பொழுது காணப்படும் 2.1 மில்லியன் நிலங்களும் பாசனமடைய உதவும். இதிலிருந்து 150000 கிலோ வாட் மின் சக்தி உற்பத்தி செய்யலாம்.

கிருஷ்ணை பெண்ணர் திட்டம் பெண்ணைற்றில் சித்தேச்வரத்துக்கு அருகாமையில் ஒரு மின் திட்டமும் நந்தி கொண்டாவில் ஒரு மின் திட்டமும் உருவாகலாம்

தாதுப் பொருள்கள் :- மச்குண்டிலிருந்து 50 மைல் முதல் 200 மைல் வரை நிலக்கரி, இரும்பு,

தங்கப் படிவுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளைத்தவிர மின்சாரத் தொழிலுக்கு உதவும் அப்பிரகம், கிராபைட் தாதுப் பொருள்களும் இருக்கின்றன. அருகாமையில் மரங்கள் அடர்ந்த காடுகள் இருப்பதால் பென்சில் தொழிற்சாலை ஏற்பட வசதியுண்டு.

ஆந்திராவில் ஆர்க்கியன் பாறைகள் இருக்கின்றன. இப்பாறைகளில் மாங்கனீஸ், இரும்பு, தங்கம் செம்பு, மைகா, கிராபைட்டும் சில ரேடியோ ஆக்டிவ் தாதுக்களும் காணப்படுகின்றன. கடப்பை கர்நூலில், காணப்படும் பாறைகளில் கல்நார், பைரைடிஸ், ஸ்டீடைட், ஹேமடைட், காரீயம், சுண்ணும்புக்கல், குவார்ட்ஸைட் சந்தனக்கல் (Sand-Stone) கடப்பைக் கற்கள் இருக்கின்றன. கோதாவரிப் பள்ளத்தாக்கில் நிலக்கரியும் ஒருவிதக் களிமண்ணும் காணப்படுகின்றன. ஆதலால் பீங்கான் தொழிற்சாலைக்குத் தேவையான வசதியுள. கிருஷ்ணு கோதாவரி ஜில்லாக்களில் காணப்படும் நிலக்கரியிலிருந்து நிலக்கரி வாயுவும் தயாரிக்கலாம். கொண்டப்பள்ளியில் குரோமைட் கனிப்பொருள் கிடைக்கிறது. மேலும் ராயலசீமையிலும் கோதாவரி கிருஷ்ணு பிரதேசங்களிலும் வைரம் இருப்பதாகக் கருதப்படுகிறது. உலகப் பிரசித்தி பெற்ற கோகினூர் வைரம் இங்கிருந்துதான் எடுக்கப்பட்டது. தற்பொழுது மசூலிபட்டணத்துக்கருகாமையில் கந்தகத் தாது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நெல்லூரில் காணப்படும் நேர்த்தியான மணல் கண்ணுடித் தொழிலுக்கு ஏற்றது. நெல்லூர், விசாகபட்டணம் இவ்விடங்களில் எருவாக உபயோகிக்கப்படும் கால்ஷியம் பாஸ்பேட் கிடைக்கிறது.

துறைமுகங்கள் விசாகபட்டினம் 1933-ல் கப்பல் வந்து தங்குவதற்குரிய துறைமுகமாக மாற்றப்பட்டது. இப்பொழுது இது பெரிய துறைமுகமாக விளங்குகிறது. இது ஒரு கப்பல் படைத்தலம். இதன் பின்புற நாடுகள் ஒரிஸா, ஹைதராபாத், மத்தியப் பிரதேசம் என்பன. ஆந்திரக் கடற்கரை ஹிந்துஸ்தான் கம்பெனி கப்பல் கட்டும் தலம் இங்குள்ளது. இதன் முக்கிய ஏற்றுமதி பொருள்கள் மாங்கனீஸ், நிலக்கரி, எண்ணெய் வித்துக்கள். இங்கு பர்மா ஷெல் கம்பெனியின் எண்ணெய்க் கிடங்கும் உள்ளது. காக்கிநாடாவும், மசூலிபட்டினமும் சிறிய துறைமுகப் பட்டினங்கள்.

தொழிற்சாலைகள் விசாகபட்டினம் ஸ்ரீகாகுளம் ஜில்லாக்களில் சணல் ஆலைகளும் சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. ராஜமந்திரி காகிதத் தொழிற்சாலை, கர்னூல் வனஸ்பதி, குண்டூர் சணல் ஆலை, விஜயவாடா சிமெண்டு ஆலை (தினசரி 300 டன்) மசூலிபட்டினம் ஆந்திர ரசாயனக் கருவி உற்பத்தி

சாலை, கூடூர் பீங்கான் சாமான்கள், (இதனருகே குவார்ட்ஸ், பெல்ஸ் பர், களிமண் கிடைக்கின்றன.)

குண்டூர் புகையிலை உற்பத்திசாலை ஏலூறு (மே. கோதாவரி,) கர்னூல் கம்பள நெசவு, சாமல் கோட்டை சர்க்கரை ஆலை என்பன முக்கியமானவை.

கோடை வாசஸ்தலம் சித்தூர் ஜில்லாவில் மதனப்பள்ளிக்கருகா மையில் 4000 அடி உயரத்திலிருக்கும் ஹாஸிலிகொண்டா நிலையம் கூடிய சீக்கிரத்தில் கோடை வாசஸ்தலமாக மாறலாம். இது மதனப்பள்ளி கதாரி ரோடில் மதனப்பள்ளியிலிருந்து 15 மைல் தூரத்தில் உள்ளது.

கர்னூல் தற்காலிக தலை நகரம். இது ஒரு தீவுபோன்றது. கிழக்கு, தெற்கு. மேற்கில் துங்கபத்ரா நதியாலும் அதன் உபநதி ஹுன்டிரியாலும் சூழப்பட்டுள்ளது. வடக்கில் கடப்பை கர்நூல் கால்வாய். ஜனத்தொகை 65000. பரப்பு நான்கு சதுர மைல். டவுன் விஸ்தரிப்பதற்கும் முன்னேற்ற மடைவதற்கும் நல்ல வசதிகள் இருக்கின்றன.

முக்கியமான புண்ணிய க்ஷேத்திரங்கள்:—

திருப்பதி	வேங்கடாசலபதி
திருச்சானூர்	ஸ்ரீ பத்மாவதித் தாயார்
மங்களகிரி	ஸ்ரீ பானக நரசிம்மர்
காளஹஸ்தி	வாயுலிங்கம்
ஸிம்ஹாசலம்	ஸ்ரீ நரசிம்ஹர்
விஜயவாடா	கனகதுர்கா
ஸ்ரீ சைலம்	ஸ்ரீ சைலம் அல்லது ஸ்ரீ பர்வதம் — ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸ்வாமி

The Indian Union

Total Area :-	11,76,864 Sq. Miles,
Total Population :-	35,68.79.304
Total Villages	5,58,089
Total Cities	3,018
Total Houses	6,43,61,676
Village Houses	2,95,60,421
City Houses	1,03,05,288
City Dwellers	6,18,75,123

Average house-hold members in village	5·4
,, ,, city	6·
,, in city and village	5·5

Calcutta: 2nd largest town in the Commonwealth.

Total population 2550000

90000 Sq. miles.

$\frac{3}{10}$ of the whole Earth is land

$\frac{7}{10}$,, ,, water

Of the land $\frac{4}{10}$ is Arid.

$\frac{6}{10}$ is Fertile land

So only 18% of the earth is fertile land.

SYMBOLS.	DISCOVERERS.
$>$, $<$	Hariot
$\overline{}$	Vieta
( )	Girard
$\sqrt{}$	Rudolff
$\neq$, $\ngtr$, $\nless$,	Euler
Area of a triangle $\sqrt{s(s-a)(s-b)(s-c)}$	Hero of Alexandria
$+$, $-$	Widman
a, *b*, *c* for known quantities *x*, *y*, *z* for unknown quantities	Descartes
X for mulitiplication ∷ for proportion	Oughtred
Fractional Index	Wallis

ZERO DAWNED IN



Six added to five will give nine.

NINE

Seven is half of Twelve

(Draw a line in the middle)

There are three vessels of capacity 8,5 and 3 measures. The biggest is full and the others empty. Show how to get 4 measures exactly.

8 Measures.	5 Measures.	3 Measures.
8	0	0
3	5	0
3	2	3
6	2	0
6	0	2
1	5	2
1	4	3
4	4	0

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

Making Numbers 1 to 10 by means of four 4's

No.	Process.
1	$\frac{4+4}{4+4}$ or $\frac{4 \times 4}{4 \times 4}$ or $\frac{4 \div 4}{4 \div 4}$
2	$\frac{4}{4} + \frac{4}{4}$
3	$\frac{4 \times 4 - 4}{4}$ or $\frac{4+4+4}{4}$
4	$4 + \frac{4-4}{4}$
5	$\frac{4 \times 4 + 4}{4}$
6	$4 + \frac{4+4}{4}$
7	$4 + 4 - \frac{4}{4}$
8	$4 \times 4 - 4 + 4$ or $4 + 4 + 4 - 4$
9	$4 + 4 + \frac{4}{4}$
10	$\frac{44 - 4}{4}$

REVERSIBLE MAGIC SQUARE.

11	77	62	29
69	22	17	71
27	61	79	12
72	19	21	67

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



The sum of any two adjacent numbers will be equal to the sum of the two diametrically opposite numbers.

Old Method of Multiplication.

8654 x 963



CONNEMARA PUBLIC
10 DEC 1955
MADRAS



Three numbers on any diameter will make 60.

Social Studies

"India, it has been said, suffers to-day, in the estimation of the world more through the world' ignorance of her achievements than the absence or insignificance of those achievements. As time goes on it will be increasingly realised that a knowledge of the history and culture of India is essential to the foundation of a proper understanding of the origin and growth of Western civilization".

H. G. Rawlinson

The advocates of social studies state that a child is enabled by such a course to fix "where he is in time, space and society". And though it utilises the subject-matter of History, Geography, Civics and Economics, it does so, not as isolated facts, but as an **integrated process.**

They also postulate the condition precedent for the successful working of the course and further warn us against some of the pitfalls in its practical working.

They are:

1. Facts ought not to be presented in an unrelated way.

2. One of the first steps to take when such a course is started is to found a reference library-without it the course cannot be worked.

3. The aims of Social Studies-laudable in its own way-are best attained by the adoption of the **Project** or any other **Activity Method.**

4. For the success of the Scheme, essentially spontaneous in its working, "no central authority can lay down a detailed syllabus to be taught uniformly throughout a whole province" as the details of the local social life and historical and geographical factors will not be exactly the same for every locality, and consequently, there can be no uniform text-book for the whole or part of a state but only a number of reference books from which the pupils could cull out, under the guidance of teachers, the relevant information in their adventure of discovery.

Further it is conceded that in the High School stage, the pupil is ready for a chronological study of the history and Geography of his country period by period.

The defects in the present scheme are that chronology is neglected, that the items included in the syllabus lack coherence and logic; and therefore the teaching of miscellaneous facts in an unrelated way leads only to confusion. Above all, subjects which have no disciplinary value should not be included in the school curriculum for facts as such are only a burden to the memory-devoid of the joy of a sense of exploration or achievement in the course of the acquisition of knowledge.

Careful selection of facts and their proper presentation with due emphasis on the **why** and **how** thereof are of utmost importance for class room study.

To teach sociol studies as the pioneers of the scheme have contemplated it, we should have a good **reference library** for each class and form, so that **projects**

might be set. Such a library in the Regional language cannot be had for many years to come and to attempt it without this neccssary equipment is to put the cart before the horse.

Further to enforce a standardised syllabus for a whole state is repugnant to the very genius of the scheme.

Thirdly, the aims of the social studies course are not reflected in the present syllabus, as there is no real integration of the various subjects-history, geography and civics.

Fourthly, the syllabus totally neglects the geography and history of the Home-land and the study of the ancient valuable monuments of the land, and thus a valuable opportunity to exploit the environment and to stimulate the spirit of observation and enquiry on the part of the pupils is denied to them.

Lastly, India has had a glorious peried of cultural expansion in the past in all directions of the globe and the syllabus has failed to take note of it. Hence the present syllabus is unsuitable for adoption at present, and further needs considerable modification to ensure a good course which will confer lasting benefits on the pupils.

An alternate scheme in outline is indicated below :-

(B)

ALTERNATE SUGGESTION

I FORM. Natural Regions of India - Physical, Economic - History of India through the Ages - Mainly biographical.

Religious leaders - Great Scientists, and their contribution to human welfare.

II FORM. Natural Regions of India,

(a) Mineral Wealth,

Industries - Commerce, Transport.

(b) Outline of the Dynastic History of India in brief - as a movement with emphasis on Social and cultural life - Reformers.

(c) Find the World - Discoveries

(d) Feeding Humanity - India and the World F. A. O.

(e) Clothing

III FORM Geography of Eurasia and Australia.

(a) Emphasis on South East Asia

(b) India and Greater India

India's expansion - Central Asia, Western Asia, and Africa - Greece, Rome and Iran, Burma, Malaya, Annam, Siam, Indonesia . Philippines and China.

(c) Foreign Visitors.

(d) **Civics** :- Elementary - How we are governed.

IV FORM (a) World Georaphy in Outline, Ancient and modern trade routes and means of communication.

(b) World struggle for freedom, England, France, America, Italy, Ireland, Russia, Turkey, Japan, China and India.

(c) Efforts at World Peace.

(d) India and the Modern World.

V FORM (a) Geography and History of South India (Dekkan and South India) with Special reference to South Indian dynastics - Chola, Chera, Pandya, Andhra, Vijayanagar, Maratha movement, British conquest.

VI FORM (a) Indian Freedom Movement - Mauryan to Modern Times, and gradual transfer of power from British to Indian hands.

(b) Civics, (Advanced)

Central Government

State Government

Local Government

Justice, Law and Order, Defence.

Land Tenures and recent reforms.

Social welfare schemes,

Illiteracy and Adult franchise.

Citizenship :- Rights and Duties as citizens :- World - Citizenship.

ECONOMICS.

1 **Economics**

(a) **Agriculture** :- Increase of population - Programme of self-sufficiency in Food - Land tenures Disabilities of Agriculturists,

Low yield, scientific methods, mechanised large - scale farms and Co-operative Farming.

(b) **Industries** :- Factory and cottage Industries, Trade Union Movement - Labour Welfare Schemes, Nationalisation.

2 **Trade** :- (Inland and Foreign) - Protection and Free trade–Tariff Board.

3 **Finance and Banking,**

Banks Commercial - Reserve Bank-Co-operation and Co-operative credit and Multi-purpose co-ops.

4 The Indian Budget - Heads of Revenue and Expenditure-Central State and local.

5 The Ideal of the **Welfare State.**

C

FORM — WAR SYLLABUS.

(A Critical Examination)

I FORM ARABIC NUMERALS The Nine Digits and Zero–India's Gift—too high

for the standard-a bare statement has no value. In modern Education especially, in historical studies, the **Casual** is what matters—not the **Casual.**

ROADS Nothing is more misleading than a half-truth. India made roads long before Rome-•(vide Mohanjo Daro, well paved roads 5000 years ago and Ashoka's days - Trunk roads branching off in all directions from Pataliputra - Tamil inscriptions mention Vaduga P. Peru-vazhi - the Trunk road leading from the Tamil land to Andhra Desa.

ORANGES. What earthly use? Its proper place is during a study of the Mediteranean basin cotton, sugar, these are India's special products round which the history of India is woven - these are more important than oranges.

Developments of **Language** and **Writing** is beyond the grasp of Pupils of I Form.

The story of Education, Religion, Science and Arts. are out of place in I Form. At best some of them may lend themselves to be treated in Assembly classes. Only a few biographies of men in these fields can be attempted. **Features** and **Development** of religions are too abstract to interest pupils :-

What to teach and how to teach in respect of Music, painting, Sculpture, dancing and Architecture

in the class-room! The best way of introducing the pupils to these subjects is by arranging a visit to a concert or a museum or a temple - i. e. outside the class-room, as an extra-curricular activity under the guidance of competent men.

II FORM All the topics included here are best done by **projects** which our schools are totally unfit to undertake at present.

There is further no historical material, nor the geographical setting. The story of outstanding persons should be interesting but it will lack chronological sense. So the teaching will descend into a series of unrelated facts.

III FORM It is all History and Civics - too much of it in one Form - and no geography; Further History is presented as a disjointed hotch - potch. Invaders, Emperors are treated separately to the deteriment of chronology. It will cause confusion.

In a secular state, religion is a combustible material, and the urge for 'Religious Oneness ' in the syllabus is overdone.

Harmony we may attempt by tolerance and respect for the followers of other religions but synthesis of all religions is beyond the province of the teacher.

CIVICS. Items D and E are too high for the standard - better done in VI Form.

IV FORM Syllabus fairly satisfactory - may be adopted with slight changes.

V FORM It is better at this stage to change the emphasis from North India to South India - the Home land.

A Chronological study of the main dynasties of South India with suitable correlation with North India wherever necessary is desirable.

VI FORM **INTRODUCTORY**

This mixes the evolution of the Central, Provincial, and local government which is to be treated separately.

This heading 'Village autonomy in the Tamil Kingdoms of the Far South' presupposes a static condition from the Sangam Age to the 19th century. Institutions are not so **unchanging** as presumed.

Evolution of the Modern Administrative system with its deep roots in the past is to be attempted - but separately under each of its branches - Central State and Local.

The **Civics** and **Economics** parts of the syllabus may be adopted with certain omissions.

[S. R. B.]

சிறந்திடச் செய்திடாயே

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

[T. V. G.]

பாயலிற் சாயு முன்னம் பரமநின் னடிகள் தம்மை
மேயநல் லுள்ளத் தோடு மேவிடச் செய்தி கண்டாய்
பாயநல் லன்பின் யானையைப் பழுதிலா உடலி னோடும்
மேயசீர் வலிமை யோடும் மேவிடச் செய்தி ஐய.

என்னுடைச் சிறப்பிற் றுதை ஏற்றநல் லுடலி னோடு
பன்னெடு நாட்கள் வாழப் பார்ப்பது மன்றி யானும்
துன்னிய வணக்க மன்னுன் துணையடி தம்மிற் செய்ய
மன்னிய வுள்ளந் தந்து மாணுறச் செய்தி ஐய.

பெற்றவர் இருவர் தாமும் பெறலரும் உவகை பூப்ப
மற்றவர் எண்ணி யாங்கு மாணுறும் செய்கை தம்மில்
உற்றிடும் உளத்தை ஈந்து உயர்ச்சியைத் தந்திட் டென்னைத்
தெற்றென நல்ல னுக்கும் திறத்தினை அளித்தி ஐய.

ஐயவென் னினைய ராய அருந்தகை இருவர் தம்மை
வெய்யதீ வினையி னோடு வேண்டிலா மடியி னின்று
பையவே விலகி மேலும் பாங்குள செய்கை யாய
துய்யநற் கருமந் தம்மில் துலங்கிடச் செய்தி டாயே

அரும்பெறல் நட்பி னோரை அன்னையைத் தந்தை யாரைப்
பொருந்திய அன்பி னுலே போற்றிட வேண்டும் நாங்கள்
திருந்திய இவற்றின் பின்னர்த் தீர்த்தனே அடிய னேற்கு
மருந்தினு மினிய தாய மற்றொன்று வேண்டு கின்றேன்.

குற்றங்கள் செய்கி லாத கூறுசெய் நன்றி சான்ற
பற்றுளந் தருதி யாயின் பரமநின் னடிக டம்மை
உற்றிடுங் காலந் தன்னில் உயர்ந்துள ஆன்ம னுவன்
சிற்றினை யவனும் யானும் சிறந்திடச் செய்தி டாயே.

திருக்காட்டுப்பள்ளி - - பஞ்சாயத்து போர்டு தேர்தல்

[நாலாம் படிவ மாணவர்கள்]

1 எல்லைகள்:- *திருக்காட்டுப் பள்ளி, ஓம்பத்துவேலி, புதுச் சத்திரம் கிராமங்கள்.*

விஸ்தீரணம்:- *ஒரு சதுர மைலுக்குச் சற்று அதிகம்*

2 ஜனத்தொகை:- *6938 (சென்ஸஸ்படி)*

ஆண்கள்:- *3918*

பெண்கள்:- *3020*

3 வாக்குரிமை:- *ஓட்டுகள்:-3853*

4 எவ்வளவு தொகுதிகள்:- *7 வார்டுகளும், 1 ஹரிஜன தனி வார்டும்*

5 எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்:- *1 தலைவரும் 8 அங்கத்தினர்களும்.*

பதவிக்காலம்:- *3 வருஷங்கள்*

6 எவ்விதம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது?:- *பொதுவாக்காளர்களாலேயே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவது.*
எப்பொழுது கடைசி தேர்தல் நடைபெற்றது:- *12-8-53*

7 அபேட்சர்களின் சின்னங்கள்:- *1 தாமரைப்பூ 2 மோட்டார் 3 குடை 4 ஒட்டகம் 5 கூஜா*

8 ஒவ்வொரு தொகுதியிலும் ஜயித்தவர்களின் ஜாபிதா:-

1 ஆவது வார்டு:-		*ஸ்ரீ கே. துரைசாமி நாட்டார்*
2	,,	*ஸ்ரீ ஆர். என். அருணசலம்*
3	,,	*ஸ்ரீ டி. ஆர். பொன்னுசாமிப் பிள்ளை*
4	,,	*ஸ்ரீ பி. அனந்த நாராயணன்*
5	,,	*ஸ்ரீ எம். பெரியஸ்வாமி*

6 ஆவது வார்டு ஸ்ரீ எம். நடராஜன்

7 ,, ஸ்ரீ எஸ். சுந்தரராஜ நாட்டார்

8ஆவது ஹரிஜன தனித்தொகுதி ஸ்ரீ ஆர். பாலசுப்ரமணியன்.

தலைவர்:- ஸ்ரீ கே. பிச்சையா மங்கலார்.

9 பஞ்சாயத்து அலுவலகத்தின் வேலையும் நிர்வாக அதிகாரியின் வேலையும்:- பஞ்சாயத்து அங்கத்தினர்களின் தீர்மானங்களை நிறைவேற்றுவது. வருஷ வரவு செலவுக் கணக்கைப் பரிசீலித்து அனுமதித்தல், கல்வி, சுகாதாரம், தெருக்களுக்கு விளக்கு அமைப்பது, குடிதண்ணீர் வசதி, கழிவுகளை அப்புறப்படுத்தல், பஞ்சாயத்தின் தீர்மானங்களை நடைமுறையில் நிறைவேற்றிவைப்பது இவைகள் நிர்வாக அதிகாரி வேலையாகும்.

10 எவ்விதம் வருவாய் கிடைக்கின்றது?:- (வரவு இனங்கள்) விட்டுவரி, வாகனங்கள் வரி, தொழில் வரி, குளம், குட்டைகள் வரி, தமாஷாவரி, முத்திரைவரி, சந்தைவரி முதலியன.

11 செலவு இனங்கள்:- பஞ்சாயத்து அலுவலக நிர்வாகம் வரிகள் வசூலிப்பது, சுகாதாரம், கல்வி, தெருக்களில் விளக்கு அமைப்பது, குடிதண்ணீர் வசதி, கழிவுகளை அப்புறப்படுத்தல் முதலியன.

REPORT ON
PHYSICAL EDUCATION

1953-'54.

[R. G. N.]

The area of the playground is 3 1/4 acres. The proposal to acquire an adjacent plot of about 3 acres for the extension of the playground is pending with the Revenue Department.

The following Courts are being laid out.

1.	Foot-ball courts.	3	One for Seniors & Juniors. One for Sub-juniors. The third for IV Set.
2.	Volley Ball Courts	2	
3.	Basket Ball Court	1	
4.	Badminton Courts	2	
5.	Tenikoit Court	1	For Girls.
6.	Net Ball Court	1	For Girls.

The boys are grouped into four Houses. The names of the Houses are 1. ARJUN. 2. BHISHMA, 3. RANJIT. 4. SHIVAJI. Each House is grouped into four sets such as Seniors, Juniors, Sub-Juniors and IV Set.

Method of grouping: $1\frac{1}{2}$ times height in inches plus weight in pounds.

SENIORS: 186 and above.

JUNIORS: 166 to 185.

SUB-JUNIORS: 146 to 165.
IV SET: 145 and below.

The captains of all the sets were elected by the boys themselves and the captains of the Senior sets become the members of the Games Committee. There is also a Girl member in the Committee. She was elected by the girls.

Play for all programme: Play for all is being conducted for four days a week from 4-30 p. m. to 5-15 p. m. The following games are provided for: Foot-ball, Volley Ball, Basket Ball, Captain Ball, Dodge Ball and Soft Ball. Girls are provided with Tenikoit and Throw Ball.

INTER-HOUSE TOURNAMENTS AND SPORTS

It has been resolved by the Games Committee to conduct the following Tournaments for the various groups.

SENIORS:
1. Foot-Ball.
2. Volley Ball.
3. Basket Ball.

JUNIORS:
1. Foot-Ball.
2. Volley Ball.
3. Basket Ball.

SUB-JUNIORS:
1. Foot-Ball.
2. Kho-Kho.

IV SET:
1. Kho-Kho.

GIRlS: Tenikoit & Throw Ball.

Sports are also conducted during the Founder's Day Celebration. The "Sudharma Shield" is to be awarded to the House that scores the highest number of points in games only.

The "Maxwell Lawford" Cup is to be awarded to the House that scores the highest number of points both in games and sports put together.

Separate sports items also are gone through for girls both for Seniors and Juniors.

Optional Activities: We provide the following games for the optional period.

1 Cricket 2 Hockey 3 Foot-Ball 4 Volley Ball
5 Basket Ball 6 Soft Ball and 7 Badminton.

Inter—School Activities: Our School is a member of the Tanjore District Athletic Association. We entered for the following tournaments for the various sets mentioned below.

School Eleven:	CRICKET
Seniors:	VOLLEY BALL
Intermediates:	VOLLEY BALL

The Cricket team and the Intermediate Volley Ball Team are the Zone Winners and they are to take part in the Inter-Zone Matches to be conducted by the Association.

Work of the Staff Council.

1953-'54.

Staff Council Rules approved by the District Educational Officer, Tanjore West. N. Dis. 62 B/53 dated 29—1—'53.

MEMBERS.

Sri S. R. Balasubrahmanyan, Headmaster, Ex-Officio.

,, M. R. Subbaraman, Asst. Headmaster.

,, K. Subrahmanya Ayyar.

,, V. Swaminathan,

,, Y. Narayanaswami Ayyar.

,, R. S. Thiagarajan.

,, P. Krishnamurti.

WORK DONE

7—6—'53

The Meeting of the whole staff.

1 S. S. L. C. Results reviewed.

2 Teaching of English, Languages, Mathematics & Science.

3 Composition work-Planned-

4 Syllabus-Committee formed.

5 Text books Change of-considered-

6 Environmental hygiene.

7 Admission to Forms I to III. Committee formed. Rules framed.

8 Attendance of pupils–enforcing punctuality and regularity.

5–7–'53

List of Holidays–approved.

4–9–'53

Scheme for the Quarterly Examination-approved.

21–11–'53

Scheme for the Selection and Half-Yearly Examinations–approved.

SIVASWAMI SCOUT TROOP

Scout Activities 1953-'54

Strength of Troop is 56. The Troop has been divided into seven patrols of eight scouts each. The scouts had an outing on the 5th July '53 to Thirukkanur. They rendered service at the time of Thiagabrahma Festival at Thiruvaiyaru in January 1953. The services of our scouts were utilised by the local police at the time of the visit of the Governor of Madras, His Ecellency Sri Prakasa, on the 26th October 1953. They rendered service during our School functions such as the Education Week Celebrations, The Founder's Day etc.

EXCURSIONS

About 65 boys and 10 teachers went on an excursion to Madurai, Trivandrum, Cape Comorin, Tinnevelly and Tiruchendur from 29th December 1952 to 3rd January 1953.

FIVE YEAR PLANS:



EDUCATION

(PUPILS)

ADDITIONAL

IRRIGATION

IN ACRES



LAKHS

Programme For Industry (Private Sector)

PRODUCTION.

Industry



DIESEL Engines



Cement.



Cloth (Mill)



SUPER PHOSPHATE.



SULPHURIC ACID.



PAPER AND PAPER BOARD.



Sugar.

Industry	1951-52	1955-56	Unit
Diesel Engines	4500	46500	(In Thousands)
Cement	2500000 Tons	4500000 Tons.	(In Million Tons)
Cloth (Mill)	3500000000 yds.	4500000000	(In thousand Million yds.)
Super Phosphate	52500	177500 tons.	(In Ten Thousand Tons.)
Sulphuric Acid	100000 Tons.	180000 Tons.	In Ten Thousand Tons.
Paper and Paper Board	100000 Tons	165000 Tons.	In Ten Thousand Tons
Finished Steel	1000000 Tons	1300000 Tons.	(In Hunderd Thousand Tons.)
Sugar	1100000 Tons.	1500000 Tons	

Irrigation and Power.



CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS



SOCIAL SERVICES

SCHOOL PARLIAMENT 1953-54

SPEAKER

Mr. A. Chockalingam (VI Form A.)

DEPUTY SPEAKER

Mr. S. Thangavelu (VI Form B.)

CABINET MEMBERS

1 Mr. A. Balasubrahmanyan (VI Form B)
Minister for Law & Order.
(School Pupil Leader)

2 ,, M. C. Shanmugham (VI Form B)
Minister For Home & Finance.
(Asst. School Pupil Leader.)

3 ,, S. Govindarajan (V Form E)
Minister for Puplic Works.

4 ,, G. Tambaiyan (VI Form C)
Minister for Education.

5 ,, P. S. Narayanaswami (VI Form D)
Minister for Health.

6 ,, R. Varadarajan (III Form A)
Minister For Food.

7 ,, S. Muthu (IV Form A)
Minister For Agriculture.

8 ,, C. Shanmugham (V Form E)
Minister For Information.

9 ,, S. Rajangam (VI Form B) Minister For Games.

10 ,, C. Ramarajan (VI Form C.)
Minister For Entertainment.

11 ,, S Darmarajan (VI Form D) Chief Secretary.

THE KALYANI HOME,

Sir Sivaswami Ayyar High School, Tirukattupalli.

MEMBERS OF CABINET.

SPEAKER :	Mr.	N. Ramadoss
DEPUTY SPEAKER :	,,	V. Chelladorai
CHIEF MINISTER :	,,	A. S. Doraiswami
